பக்கங்கள்:-25

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | வைகாசி 22 | வியாழக்கிழமை | 05.06.2025 | அதிர்வு 305

## தியாகி சிவகுமாரன் நினைவேந்தல் இன்று



தமிழின விடுதலைப் போராட்டத்தில் முதன் முதலாக உயிர்நீத்த தியாகி பொன். சிவகுமாரனின் 51ஆவது நினைவு 06



# யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் மேலும் 6 எலும்புக்கூடுகள் அடையாளம்

## சர்வதேசக் கண்காணிப்பை வலியுறுத்தி இன்று காலை கவனவீர்ப்புப் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்றும் தொடர்ந்த அகழ்வுப் பணியில் மேலும் 6 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணிமனிதப்புதைகுழியில்இரண்டாம் கட்டமாக மூன்றாம் நாளான நேற்றும் அகழ்வுப் பணி முன்னெடுக்கப்பட்டது. இதன் போது,மூன்றாவது எலும்புக்கூட்டுத்தொகுதி பிரித்தெடுக்கப்பட்டு பொதியிடப்பட்டு சட்ட மருத்துவ அதிகாரியின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது 06

## கொரோனாவால் மேலும் ஒருவர் பலி



இலங்கையில் மீண்டும் கோவிட் -19 தொற்று பரவிவரும் நிலையில் தொற்றால் மேலும் ஒருவர் உயிரிழந்தார் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. 06

## உங்களின் பதவிகளுக்காக தமிழ் மக்களை விற்காதீர்கள்

### தமிழர் விடுதலைக் கூட்டணியில் ஒன்றிணையுமாறு தமிழரசுக் கட்சியினருக்கு ஆனந்தசங்கரி அழைப்பு

உங்களின் பதவிகளுக்காகத் தமிழ் மக்களை விற்காதீர்கள் எனத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

யாழ் . ஊடக அமையத்தில் நேற்று புதன் கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 06






'சங்கு – சைக்கிள் கூட்டு; இன்று டக்ளஸுடன் பேச்சு; சபைகளில் ஆட்சி அமைக்க ஆதரவு கேட்டு' – என்ற பிரதான தலைப்பில் நேற்று காலை முன் பக்கத்தில் முரசில் வந்த செய்தி பெரும் களேபரத்தை ஏற்படுத்தி விட்டது.

அந்தச் செய்தி வெளியான கையோடு, சைக்கிள் கட்சியின் பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அந்த செய்தியை குறிப்பிட்டு அதனை 'ஃபேக் நியூஸ்' (போலிச் செய்தி) என்று தமது உத்தியோகபூர்வ முகப்புத்தகம் ஊடாக அமர்க்கள அறிவித்தல் விடுத்தார்.

அவ்வளவுதான். சைக்கிள் தம்பிகள் எல்லாம் எமது பத்திரிகையையும், என்னையும் ஒரு பிடி பிடித்து தள்ளிவிட்டார்கள்.

ஒரு பத்திரிகையின் செய்தியை மறுப்பதற்கு முன்னர் அது பற்றிய அடிப்படை ஆராய்வு கூட இல்லாமல், ஒரு நீண்டகால அரசியல்வாதி இப்படி மறுப்பு வெளியிடுவார் என்பதை நம்ப முடியாமல் இருந்தது. நடிகர் வடிவேலு பாணியில் கூறுவதானால் ரொம்ப சின்னப் புள்ளைத்தனமான 06

# சி.வி.கே.-டக்ளஸ் இன்று சந்திப்பார்கள்





(பிரபாகரன் டிலக்சன்)

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்குமிடையிலான சந்திப்பு ஒன்று இன்றைய தினம் இடம்பெறவுள்ளது எனத் தெரிய வருகின்றது.

நேற்றைய தினம் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே ஈ.பி.டி.பி – தமிழரசுக் கட்சி சந்திப்பு தொடர்பில் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கருத்துத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

உள்ளூராட்சித் தேர்தல்களில் ஆட்சியமைப்பது தொடர்பில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் சீ.வி.கே சிவஞானமும் நேற்றுமுன்தினம் என்னுடன் தொலைபேசியில் தடர்பாடினார். இன்று மாலை அவர்களுடன் சந்தித்து பேசவுள்ளோம்.

மேலும் இலங்கை தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் தவிசாளர் பிரகாஷ் என்னை சந்திப்பதற்கு பல தடவை முயற்சிசெய்தார். இன்றைய தினம் தமிழரசுக் கட்சியின் தலைவரோடு கலந்துரையாடவுள்ளமையால், சந்திப்பின் பின்னர் இது பற்றி யோசிக்கலாம் என அவரிடம் தெரிவித்தேன். – என்றேன்.

# ‘சங்கு - சைக்கிள்’ தரப்பில் சித்தர் டக்ளஸை இன்று சந்தித்துப் பேச்சு





(பிரபாகரன் டிலக்சன்)

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் கொள்கை ரீதியான உடன்படிக்கையில் கைதச்சாத்திட்ட நிலையில், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத் தலைவர் தர்மலிங்கம் சித்தார்தனுக்கும் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்குமிடையில் நேற்று இடம்பெறவிருந்த சந்திப்பு பிற்போடப்பட்டு இன்றைய தினம் இடம்பெறவுள்ளது.

முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் தர்மலிங்கம் சித்தார்தன் ஆகியோர் சந்திக்க விருப்பம் தெரிவித்தனர் எனவும், அதற்கு டக்ளஸ் தேவானந்தா தான் நேரடியாக சித்தார்த்தனின் இல்லத்தில் வந்து சந்திக்கிறேன் என தெரிவித்தாக “சங்கு – சைக்கிள் கூட்டு இன்று டக்ளஸ“டன் பேச்சு” என தலைப்பிட்டு முரசு பத்திரிகை நேற்று காலை செய்தி வெளியிட்டிருந்தது.

அச்செய்தி போலியானது என தமிழ்த் தேசிய பேரவையின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது முகநூலூடாக தெரிவித்திருந்தார். இதனால் அந்தச் பத்திரிகைச் செய்தி அதிகம் விமர்சனத்திற்குள்ளாக்கப்பட்டது.

இந் நிலையில் குறித்த சந்திப்பை நாளைய தினத்துக்கு(இன்றைய தினத்துக்கு) ஒத்திவைக்குமாறு சித்தார்த்தன் நேற்று நண்பகல் 12 மணியளவில் தொலைபேசிமூலம் டக்ளஸிடம் கோரிக்கை முன்வைத்த நிலையில் குறித்த சந்திப்பை இன்றைய தினம் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்நிலையில் டக்ளஸ் தேவானந்தாவுடனான சந்திப்புக் குறித்து வெளியான செய்திகள் தொடர்பில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரனிடம் ஊடகங்கள் வினாவியபோது, “அந்தச் செய்தியை பத்திரிகை ஊடாக மாத்திரமே அறிந்துகொண்டேன். அந்த செய்தியின் உண்மைத் தன்மை பற்றி அந்த பத்திரிகை எங்களுடைய தரப்பினருடன் கலந்துரையாடவில்லை. டக்ளஸ் தேவானந்தாவோடு இதுவரை எந்தவித சந்திப்புகளும் இடம்பெறவில்லை. இது ஒரு பரபரப்புச் செய்தி” – என்றார்.

இந்நிலையில் ‘டக்ளஸ் தேவானந்தாவுடன் சங்கு – சைக்கிள் கூட்டணி சந்திப்பு’ குறித்து வெளியான செய்திகள் தொடர்பில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வினாவியபோது –

“உள்ளூராட்சித் தேர்தலில் ஆட்சியமைப்பதற்கு எங்களுடைய (ஈ.பி.டி.பி.) ஆதரவு பெறுவது தொடர்பில் தர்மலிங்கம் சித்தார்த்தன் என்னுடன் தொலைபேசியில் உரையாடினார். இது தொடர்பில் இன்று(நேற்று) சந்தித்து கலந்துரையாடலாம் என்றேன். பின்னர் நன்பகல் தொடர்புகொண்டு இச்சந்திப்பை பிற்போட்டு நாளை(இன்று) நடாத்துவோம் என்றார். எனக்கும் அது சரியாகவே தோன்றியது” – என்றார்.







# கிண்ணியாவில் கடற்படைக்கு எதிராக மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

(எச்.எம்.ஹலால்தீன்)

கிண்ணியா மீனவர்களால் நேற்று காலை 7.30 மணியளவில் கிண்ணியா தோனாக் கடற்கரையில் ஆர்ப்பாட்டமும் கண்டனப் பேரணியும் நடத்தப்பட்டது

நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை குச்சவெளியில் மீனவர் ஒருவர் கடற்படையினரால் சுடப்பட்டு பலத்த காயமடைந்துள்ளார். அந்த மீனவருக்கு நீதி, நியாயம் கோரியே கண்டனப் பேரணியும் ஆர்ப்பாட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட சூரை வலை மீன்பிடியார்கள் சங்கத்தால் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் நூற்றுக்கும் மேற்பட்ட மீனவர்கள், மீனவர் சங்கத்தின் உறுப்பினர்கள், உள்ளூர் அரசியல்வாதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின்போது ஆர்ப்பாட்டக்காரர்கள், மீனவர்களுக்கு எதிரான கடற்படையினரின் செயற்பாடுகளைக் கண்டித்து கடற்படையினருக்கு எதிராகக் கோஷமிட்டனர்.

இவ்வாறான செயல் இனி நடைபெறக் கூடாது என்றும், மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடி தொழிலில் ஈடுபட அனுமதி வழங்க வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர்.



# பன்றி வளர்ப்பு கைத்தொழிலை மீளக் கட்டியெழுப்ப செயலணி



பன்றி வளர்ப்பு கைத்தொழிலை மீளக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான பணிகளை மேற்கொள்வதற்கான செயலணியொன்றை நியமிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

விவசாய, கால்நடை வள அமைச்சின் செயலாளர் மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ஒருவரின் இணைத் தலைமையில் இந்த செயலணி நியமிக்கப்படவுள்ளது.

கடந்த ஆண்டு நாட்டின் பல பகுதிகளில் பரவிய ஆபிரிக்க பன்றிக் காய்ச்சல் காரணமாக 1,594 பன்றிப் பண்ணைகளில் 61,695 பன்றிகள் உயிரிழந்துள்ளன என தரவுகள் தெரிவிக்கின்றன.

எனினும், நோய்ப் பரவலின் தற்போதைய நிலை மற்றும் நோய் பரவல் தொடர்பான, சரியான விஞ்ஞான ரீதியான தகவல்கள் இன்மை காரணமாகப் பன்றிப் பண்ணைகளை மீண்டும் ஆரம்பிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

எனவே, மேற்படி பணிகளை மேற்கொள்வதற்காக இந்த செயலணியை உருவாக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், அதற்காக அமைச்சரவையின் அனுமதியும் பெறப்பட்டுள்ளது.






# மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவராக ஹந்துன்நெத்தி நியமனம்

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் புதிய தலைவராக அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி நியமிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் எதிர்வரும் 11ஆம் திகதி புதன்கிழமை அமைச்சர் சுனில் ஹந்துன் நெத்தி தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, இந்தக் கூட்டத்துக் கான முன்னோடிக் கூட்டம் நேற்று புதன் கிழமை மாவட்ட செயலகத்தில் நடை பெற்றது. இதில், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அரச அதிபர் மற்றும் பிரதேச செயலர்கள் கலந்துகொண்டனர்.

அமைச்சர் சுனில் ஹந்துன் நெத்தி மாத்தறை மாவட்டத்தில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டவர் என்பதும் குறிப்பிடத் தக்கது.





# குருணாகலில் 2 ஆண்களின் சடலங்கள் மீட்பு!

**(க.மகாதேவன்)**

குருணாகலில் வாரியப்பொல – கலுக முவ வீதியில் உள்ள வாவியில் மிதந்த நிலையில் இரண்டு ஆண்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று வாரியப் பொல பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர்களில் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

வாரியப்பொல பிரதேசத்தைச் சேர்ந்த 57 வயதுடையவரே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில், சடலமாக மீட்கப்பட்ட மற்றைய நபர் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்க வில்லை என்று பொலிஸார் தெரிவித்த னர். அந்தச் சடலம் அழுகிய நிலையில் காணப்படுகின்றது.

இரண்டு சடலங்களும் குருணாகல் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசார ணைகளை வாரியப்பொல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# பொருளாதாரத்தை முறையாக மாற்றியமைக்க மக்களுடன் இணைந்து பணியாற்றவேண்டும்

## ஜனாதிபதி திறைசேரி அதிகாரிகளிடம் தெரிவிப்பு



பொருளாதார வெற்றிகளை அடைவதன் மூலம் மாத்திரம் ஒரு நாடு அபிவிருத்தி அடைய முடியாது என்றும் அத்துடன், சமூக அபிவிருத்தி மற்றும் அரசியல் கலாசாரம் ஆகிய மூன்று தூண்களும் ஒரே நேரத்தில் கட்டியெழுப்பப்பட வேண்டுமென ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.

நிதி அமைச்சில் நேற்று திறைசேரி அதிகாரிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

சீனா, கொரியா மற்றும் வியட்நாம் போன்ற நாடுகள் பல காலகட்டங்களில் பொது மக்களுடன் இணைந்து மேற்கொண்ட கூட்டு முயற்சியின் பலனாகவே பொருளாதாரத்தில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

ஒரு நாட்டை அபிவிருத்தியை நோக்கி அழைத்துச் செல்வதில் தனிநபர்கள் என்ற ரீதியில் சில பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அதே நேரம் இலக்குகளை அடைய அனைவரும் ஒன்றிணைந்து முயற்சி செய்ய வேண்டுமெனவும் ஜனாதிபதி இங்கு சுட்டிக்காட்டினார்.

அரசியல் அதிகாரம் என்ற வகையில் அதிகாரிகள் மீது தனது கருத்தை மாத்திரம் திணிக்க மாட்டேன் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, நிபுணத்துவ அறிவு கொண்ட அதிகாரிகள் மற்றும் அரசியல் அதிகாரம் கொண்டவர்களுக்கு இடையே இடம்பெறும் முறையான கலந்துரையாடல்கள் மூலம் தேவையான முடிவுகள் எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

சில தன்னிச்சையான அரசியல் தலையீடுகளால் கடந்த காலங்களில் இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள் தோல்வியடைந்த விதம் குறித்தும் இதன் போது ஜனாதிபதி நினைவு கூர்ந்தார்.

மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த துறைகளை அரசாங்கத்தின் கீழ் பேணுவதுடன், அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கைகளின் அடிப்படையில் குறித்த நிறுவனங்களில் கட்டமைப்பு ரீதியான மாற்றங்களைச் செய்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி இங்கு திறைசேரி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

இலங்கையின் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதித் திட்டம், அத்துடன் அமெரிக்கா விதித்துள்ள புதிய வரிகள், 2027 ஆம் ஆண்டுக்கான புளூ சலுகை குறித்தும் ஜனாதிபதி நிதி அமைச்சின் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

இந்த நிகழ்வில், தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ, நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்ஷண சூரியப்பெரும, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன மற்றும் திறைசேரியின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வேலை...!

உண்மையில் அந்தச் செய்தியை பெறுவதற்கான தேடல், 'சைக்கிள் – சங்கு' கூட்டணியை இலக்கு வைத்து ஆரம்பிக்கப்பட்டது அல்ல.

ஈ.பி.டி.பியின் ஆதரவை இலங்கைத் தமிழரசு கட்சி கோரலாம் என்ற பேச்சு அடிபட்டதால், அது குறித்து தமிழரசு கட்சி வட்டாரங்களில் துருவித் தேடினேன். ஓரிடமும் செய்தி உறுதிப்படுத்தப்படாத காரணத்தினால் நேற்று முன்தினம் இரவு ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளத் தேவானந்தாவை தொடர்பு கொண்டு கேட்டேன்.

(நேற்று முன்தினம் இரவு நான் அவருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது நேரம் இரவு 10.30. மணி. அச்சமயத்தில் தமிழரசுக் கட்சியிடமிருந்து அவருக்கு தொடர்பாடல் ஏதும் வந்திருக்கவில்லை.)

"தமிழரசு கட்சியிடம் இருந்து எந்தக் கோரிக்கையும் வரவில்லை. ஆனால் நண்பர் சித்தார்த்தன் இந்த விடயமாக – உள்ளூராட்சி சபைகளில் தமது கட்சியின் ஆதரவை பெறுவதற்காக – என்னோடு நாளை (அதாவது நேற்று புதன்கிழமை) பேசுவதற்கு இருக்கிறார்" என்று குறிப்பிட்டார் டக்ளஸ் தேவானந்தா.

அதனையே நாங்கள் நேற்றைய காலை பத்திரிகைக்கு தலைப்புச் செய்தியாக்கினோம். டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்ட கருத்துக்கள் அந்த செய்தியில் அப்படியே இடம்பெற்றிருந்தன. அந்த செய்தியை வாசித்தால் செய்தியின் மூலம், தகவல் எல்லாம் அதிலேயே உண்டு. அதனை ஆராயாமல் – அந்தச் செய்தியில் குறிப்பிட்டபடி புளொட் தலைவர் சித்தார்த்தனோடு தொடர்பு கொண்டு உண்மையைக் கண்டறியாமல் (தாம் அவரோடு கொள்கை(?) ரீதியாக இணக்கக் கூட்டு வைத்திருப்பதால் தம் பக்கத்தில் இருக்கும் அவருடன் ஊடாடுவது கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு ஒரு விவகாரமாக இருக்காது, ஏனெனில் சித்தார்த்தன் இப்போது கஜேந்திரகுமாருடன் கொள்கை உடன்பாட்டு இணக்கத்திலும் நெருக்கத்திலும் இருப்பவர்) எடுத்த எடுப்பில் அந்தச் செய்தி **'Fake News'** எனப் பகிரங்கமாக அறிவித்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இப்போது அச் செய்தி தொடர்பில் உண்மைகளை டக்ளஸ் தேவானந்தாவே பிற செய்தி ஊடகங்களுக்கு நேற்று தெளிவுபடுத்திய நிலையில், மூக்கு உடைந்து போய் இருக்கின்றார்.

முரசு செய்தியை 'ஃபேக் நியூஸ்' என்று (போலிச் செய்தி என்று) தெரிவித்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கடந்த இரண்டு மூன்று, தினங்களாக முரசு வெளியிட்டு வரும், அவரது சைக்கிள் கட்சியும் அவர் கூட்டுச் சேர்ந்திருக்கும் சங்குக் கட்சியும் செய்திருக்கும் உடன்பாடு குறித்த விடயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும்.

இது கொள்கைக்கான கூட்டு என இரண்டு தரப்புமே கூறினாலும், இது கொள்கைக் கூட்டல்ல, உள்ளூராட்சி சபைகளில் அதிகாரங்களைக் கைப்பற்றுவதற்கான எண்ணிக்கை விளையாட்டுக்குரிய **(Number Game)** கூட்டு மட்டுமே என்பதை தொடர்ந்து தெளிவு படுத்தி வருகிறோம்.

அந்த விடயத்தையே நேற்றுக் காலை முரசு முதல் பக்கத் தலைப்புச் செய்தி மீண்டும் உறுதிப்படுத்தியது. அந்தச் செய்தியின் உண்மை தன்மையை ஏற்க மறுத்து, அந்த செய்தியை 'ஃபேக் நியூஸ்' என்று குறிப்பிடும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உண்மையில், தனது சைக்கிள் கட்சியும் சங்கு கட்சியும் கொள்கைக் கூட்டு என்ற பெயரில் செய்திருக்கும் ஒப்பந்தம் தான் 'ஃபேக் ஒப்பந்தம்' என்பதை – அது கொள்கைக்கான கூட்டல்ல, உள்ளூராட்சி சபைகளில் அதிகாரங்களை பிடிப்பதற்கான ஃபேக் கூட்டு என்பதை முதலில் ஒப்புக்கொள்ள வேண்டும்.

சைக்கிள் கட்சியோடு சேர்ந்து சங்கு கூட்டணிக்குக் கிடைத்த ஆசனங்களைப் பயன்படுத்தி, உள்ளூராட்சி சபை நிர்வாகங்களைக் கைப்பற்றுவதற்கு மேலதிகமாக தேவைப்படும் ஆதரவை டக்ளஸிடம் இருந்து பெறுவதற்காகவே அவர் கூட்டு வைத்திருக்கும் சங்கு கூட்டணியின் இணைத் தலைவர் சித்தார்த்தன், டக்ளஸுடன் பேசச் செல்கின்றார் என்ற உண்மையை கஜேந்திரகுமார் பகிரங்கமாக ஒப்புக் கொள்ள வேண்டும். அதை மறைத்து, மறுத்து, மறந்து, உண்மைச் செய்தியை – தகவலை – வெளியிட்ட முரசை குறுக்கு வழியில் திட்டி, அதிகாரப் பதவிக்காகச் சேர்ந்த கூட்டின் உண்மைத் தன்மையை அம்பலப்படுத்திய பத்திரிகையின் வெளிப்படுத்தலை மூடி மறைக்கலாம் என்று கனவு காணக் கூடாது.

தமிழரசு கட்சியையும் சுமந்திரனையும் வீழ்த்தும் காழ்ப்புணர்வு எண்ணத்தோடு சங்குக் கூட்டணியோடு தாம் அமைத்திருக்கும் போலிக் கூட்டை, கொள்கை கூட்டு என்று கயிறு விடும் தன் மூன்றாம் தர அரசியலை கஜேந்திரகுமார் இனியாவது நிறுத்திக் கொள்ள வேண்டும்.

அதிகாரப் பதவிகளைக் கைப்பற்றுவதற்கான சங்கு – சைக்கிள் கூட்டினால் யாழ்ப்பாணத்தில் உள்ள அரசியல்வாதிகள் சமரசம் செய்து தமது தரப்புக்கு சில அதிகாரப் பதவிகளைப் பெற்றாலும், வன்னியிலும் கிழக்கிலும் சங்கு கூட்டணிக்குள் இந்த உடன்பாட்டினால் பெரும் அதிர்வலைகள் தென்படுகின்றன. நிச்சயமாக சங்கு கூட்டணியில் இருக்கும் ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான ரெலோ ஆகியவை இந்த கொள்கையற்ற கூட்டுக்கு சம்பவம் செய்ய காத்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

நேற்றைய முரசு செய்தியால் கோப முற்ற சைக்கிள் தம்பிகள், பத்திரிகை ஆசிரியர் என்ற முறையில் என்னையும் தனிப்பட்ட ரீதியில் கொச்சைப்படுத்தி சமூக ஊடகங்களில் கிழித்துத் தள்ளத் தவறவில்லை.

ஒரு பத்திரிகையாளன் என்ற முறையில் எல்லா அரசியல்வாதிகளோடும் நான் பழகி இருக்கிறேன். அது என் கடமையும் பொறுப்பும் கூட. அதன் காரணமாக அவர்களோடு முகப்பரிச்சயமும் நட்பும் உண்டு. அப்படி, தலைவர் பிரபாகரனிலிருந்து, அவரோடு இராணுவ ரீதியில் எதிர்த்து போராடிய இலங்கை இராணுவத்தின அந்த நேர தளபதியும், முப்படைகளின் கூட்டுப்படைத் தளபதியுமான ஜெனரல் லயனல் பலகல்ல வரை பலர் உண்டு. எல்லோருக்கும் மற்ற தரப்பில் இருப்பவருடன் நான் நண்பராகவும், ஊடகவியலாளராகவும் ஊடாடி வருகிறேன் என்பது நன்கு தெரியும். அதற்காக அவர்கள் யாரும் என்னை தவறானவனாக அர்த்தம் கற்பிக்கவில்லை. கஜேந்திரகுமாரும் அவரது சைக்கிள் தம்பிமாரும் ஒரு பத்திரிகையாளர் என்ற நட்பின் காரணமாக எனக்கும் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையேயான தொடர்பையும், நான் அதன் மூலம் தவறான லாபமீட்டியவன் என்ற மாதிரி காட்டும் விதத்திலும் சமூக ஊடகங்களில் விழுந்தடித்து செய்திகள் பரப்பினார்கள். இதை எல்லாம் தாண்டி வந்து எனக்கு பல ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த மூன்றாம் தர அரசியல் பண்பியல்பு என்னை ஒன்றும் செய்யாது. இதை தம்பி கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கும் அவரின் சைக்கிள் தம்பிகளுக்கும் சொல்லி வைக்க விரும்புகிறேன்.

CLICK HERE VIDEO

## தியாகி சிவகுமாரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தினம் இன்று வியாழக்கிழமை காலை 9 மணி முதல் நடைபெறவுள்ளது.

யாழ். உரும்பிராயில் அமைந்துள்ள பொன். சிவகுமாரனின் நினைவுச் சிலை அருகே நினைவேந்தல் நிகழ்வு இடம் பெறவுள்ளது.

## யாழ். செம்மணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நீதிவான் ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் இந்த அகழ்வுப் பணி நேற்று இடம் பெற்றது. இன்றும் அகழ்வுப் பணி முன்னெடுக்கப்படவுள்ளது.

இதேவேளை, செம்மணி மனிதப் புதைகுழியில் சர்வதேசக் கண்காணிப்பின் கீழ் அகழ்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தி இன்று கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

செம்மணிச் சந்தியில் இன்று காலை 10 மணியளவில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்றும், இந்தப் போராட்டத்துக்கு அனைவரும் ஆதரவு தர வேண்டும் என்றும் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கம் கேட்டுள்ளது.

கிளிநொச்சியிலுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கப் பணிமனையில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே சங்கத்தின் தலைவி யோ.கலாரஞ்சினி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"காலத்துக்கு காலம் பல்வேறு மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டு அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால், அவை அவ்வாறே கைவிடப்பட்டுள்ளன. எனவே, தற்போது யாழ். அரியாலை, செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மனிதப் புதைகுழி சர்வதேசக் கண்காணிப் பின் கீழேயே அகழப்பட வேண்டும்." – என்றார்.

## உங்களின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"தந்தை செல்வா, ஜி.ஜி.பொன்னம்பலம், தொண்டமான் உள்ளிட்டவர்கள் உருவாக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணி இன்றும் இருக்கின்றது. தமிழர் விடுதலைக் கூட்டணியும் நானும் உயிரோடு இருக்கின்றோம்.

தந்தை செல்வா காட்டிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் வழியில் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து வரவேண்டும். நான் அரசியலில் இருந்து ஒதுங்கத் தயார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்து வெற்றிகரமாகச் செயற்பட ஒத்துழைப்பதே தந்தை செல்வாக்கு நீங்கள் செய்யக்கூடிய மரியாதை ஆகும். இறந்துபோன பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு ஆத்மா சாந்தியடையும்." – என்றார்.

## கொரோனாவால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அநுராதபுரத்தில் 6 பேருக்குக் கோவிட் தொற்று ஏற்பட்டது என்றும், இவர்களில் ஒருவர் உயிரிழந்தார் என்றும் தொற்று நோயியல் மருத்துவ நிபுணர் தேஜன சோமதிலக தெரிவித்துள்ளார்.

ஏனைய ஐவரும் சிகிச்சையின் பின்னர் வீடு திரும்பியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம், ஆசிய நாடுகளில் தற்போது பரவி வரும் கோவிட் 19இன் புதிய திரிபு குறித்து அச்சமடைய வேண்டியதில்லை என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.




# ஸ்ரீலங்கன் விமான சேவையுடன் புதிதாக இணைந்த விமானம்

ஸ்ரீலங்கன் விமான சேவையின் புதிய விமானம் நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.

Airbus A330 - 200 விமானம் பிரான்ஸின் பாரிஸிலிருந்து இலங்கைக்கான தனது பயணத்தை ஆரம்பித்தது.

நேற்று காலை 8 மணி முதல் 9 மணி வரை துறைமுக நகரத்தின் தெற்கு முனையத்திருந்து மொறட்டுவை வரையிலான கடற்பரப்பின் மேல் இந்த விமானம் 1500 அடி உயரத்தில் பறந்தது.

# குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் தயாசிறி ஜயசேகர வாக்குமூலம்



நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்று குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையானார்.

ஜனாதிபதி நிதியத்திலிருந்து பணம் பெற்றுகொண்டமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளுக்கு வாக்குமூலம் அளிப்பதற்காக அவர் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையானார்.

சுமார் 3 மணித்தியாலங்கள் வாக்குமூலம் பதிவு செய்த பின்னர் அவர் குற்றப்புலனாய்வு திணைக்களத்திலிருந்து வெளியேறினார்.




# இலங்கை மின்சார திருத்த சட்டமூலம் தொடர்பான மனுக்களின் பிரதிகள் சபாநாயகரிடம் ஒப்படைப்பு

இலங்கை மின்சார திருத்த சட்டமூலம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு மனுக்களின் பிரதிகள் கிடைத்துள்ளதாக சபாநாயகர் நாடாளுமன்றத்துக்கு நேற்று அறிவித்தார்.

அரசமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் "இலங்கை மின்சாரம் (திருத்தம்)" எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்கு மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இந்த மனுக்களின் மேலும் இரண்டு பிரதிகள் தனக்குக் கிடைத்துள்ளதாக சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.



# துன்னாலையில் 15 லீற்றர் கசிப்பு மீட்பு!

(எஸ்.ரகுதீஸ்)

யாழ். வடமராட்சி, துன்னாலைப் பகுதியில் 15 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளதுடன் அதனை எடுத்துச் சென்றவர் தப்பிச் சென்றுள்ளார்.

நேற்று புதன்கிழமை துன்னாலைப் பகுதியில் காங்கேசன்துறை பிராந்திய குற்றத் தடுப்புப் பிரிவினர் திடீர் சுற்றி வளைப்பை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது துன்னாலைப் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றில் கசிப்பை எடுத்துச் சென்ற ஒருவரை மறிக்க முற்பட்டபோது கசிப்புக் கலனை வீசிவிட்டு அவர் தப்பிச் சென்றுள்ளார்.

மீட்கப்பட்ட கலனில் இருந்த 15 லீற்றர் கசிப்பைக் காங்கேசன்துறை பிராந்தியக் குற்றத் தடுப்புப் பிரிவினர் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தியுள்ளனர்.




# 20 உள்ளூராட்சி மன்றங்கள் ஒன்று கூடும் திகதி வர்த்தமானியில் வெளியானது

ஆட்சி அமைப்பது தொடர்பில் ஏற்பட்டுள்ள நெருக்கடியின் காரணமாக கன்னி அமர்வு ஒன்றுகூடல் தாமதமாகியுள்ள கொழும்பு மாநகர சபை உள்ளிட்ட மேல் மாகாணத்தின் 21 உள்ளூராட்சி மன்றங்களின் அமர்வுகளை ஆரம்பிப்பதற்கான திகதி தொடர்பில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர சபையின் கன்னி அமர்வு ஆரம்பமாகும் 16 ஆம் திகதி மாநகர முதல்வர், மாநகர துணை முதல்வர் பதவிகளுக்காக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளதாக மேல் மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் சாரங்கிகா கல்ஹாரி ஜயசுந்தர நேற்று வெளியிட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சீதாவாக்கை நகர சபை மற்றும் சீதாவாக்கை பிரதேச சபைகளின் கன்னி அமர்வு எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கொலன்னாவ, பேலியகொடை, வத்தளை, மற்றும் மாபொல நகர சபைகளின் உத்தியோகபூர்வ பதவிக்காலம் எதிர்வரும் 18 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

தொடங்கொட பிரதேச சபையின் மற்றும் பேருவளை நகர சபையின் கன்னி அமர்வு எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவுள்ளதுடன், பேருவளை மற்றும் களுத்துறை பிரதேச சபைகளின் கன்னி அமர்வு எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

களுத்துறை மாநகர சபையின் மற்றும் மில்லனிய பிரதேச சபையின் கன்னி அமர்வு இந்த மாதம் 23 ஆம் திகதி நடைபெறும் என வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளது.

அத்துடன் ஹொரணை நகர சபை உட்பட மேல் மாகாணத்தின் மேலும் 8 பிரதேச சபைகளின் கன்னி அமர்வு ஆரம்பமாகும் திகதி தொடர்பில் அந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இன்று தியாகி தினம்

உலகையே அதிர வைத்த ஈழத் தமிழர்களின் விடுதலைக்கான ஆயுதம் தாங்கிய சுதந்திரப் போராட்டத்தில் சயனைட் கலாச்சாரத்துக்கு முக்கிய இடம் உண்டு. எதிரியிடம் பிடிபடும் போராளிகள், தங்கள் இயக்கத்தின் இரகசியங்களைப் பாதுகாப்பதற்காக, தம்முயிரை விட இயக்கத்தின் பாதுகாப்பை மேன்மையாகக் கருதி, சயனைட் வில்லைகள் மூலம் தங்களைத் தாங்களே விடுதலை வேள்வியில் ஆகுதியாக்கிக் கொள்ளும் உயரிய ஈகத்தை வழமையாக்கி கொண்டார்கள். கட்டாயப் பண்பியல்பாக்கிக் கொண்டனர்.

விடுதலைக்கான ஆயுதப் போராட்ட இயக்கங்கள் கரந்தடிப் படைகளாகச் செயற்பட்ட காலங்களில், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு இடையே ஊடுருவி, அந்த இயக்கத்தை முறியடிக்க முடியாமல் ஸ்ரீலங்கா அரசுப் படைகளும் புலனாய்வாளர்களும் திணறியமையின் பிரதான காரணங்களில் ஒன்று விடுதலை புலிகள் இயக்க நடவடிக்கைகளை அறிந்த, அதன் உறுப்பினர்கள் படையினர் வசம் உயிருடன் சிக்காமையாகும். அந்த நிலையை அந்தப் போராளிகள் கழுத்தில் அணிந்திருக்கும் சயனைட் வில்லைகள் ஏற்படுத்தின.

அந்த சயனைட் கலாச்சாரத்தை - எதிரியிடம் உயிருடன் மாட்டிக் கொள்ளாமல் இருப்பதற்காக சயனைட் வில்லைகளை உட்கொண்டு தன்னைத்தானே மாய்த்துக் கொள்ளும் உயரிய ஈகத்தை - ஈழ விடுதலைப் போராட்டத்தில் தனி ஒரு மனிதனாக முதன் முதலில் அறிமுகப்படுத்திய தியாகி சிவகுமாரனின் 51 ஆவது நினைவு தினம் இன்றாகும்.

அதனைத்தான் தமிழீழ விடுதலைப் புலிகள் பின்னர் தங்களின் உயரிய வழக்கமாக வரித்துக் கொண்டனர்.

ஈழ விடுதலைப் போராட்ட வீரர்களில் தியாகி சிவகுமாரன் ஒரு முன்னோடி ஆவார். யாழ்ப்பாணம், உரும்பிராயில் பொலிஸாரின் சுற்றி வளைப்பின் போது சிக்குப்படும் ஆபத்து நெருங்கி வந்தபோது சயனைட் நஞ்சருந்தி அவர் வீரமரணமடைந்தார். ஈழப்போராட்ட வரலாற்றில் முதன் முதலில் நஞ்சு அருந்தி உயிர் நீத்தவர் இவரே.

பொன். சிவகுமாரன் உரும்பிராயைச் சேர்ந்தவர். ஆயுதம் ஏந்துவது ஒன்றே தமிழர்கள் விடுதலைக்கு ஒரே வழி என்று உறுதியாக நம்பியவர். துரோகிகள் ஒழிப்புத் தான் அவரது முதல் குறியாக இருந்தது. எனினும் அதில் அவர் முழுமையாக வெற்றி பெறவில்லை.

*1974* ஆம் ஆண்டு ஜூலை *5* ஆம் திகதி கோப்பாய் வங்கிக் கொள்ளை முயற்சியில் கைதானபோது விஷம் அருந்தித் தற்கொலையானார் அவர்.

முன்னதாக துரோகிகளை ஒழிக்க சிவகுமாரன் எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிந்தபோதும் அது ஆற்றலின்மையின் வெளிப்பாடு அல்ல. முன் அனுபவமற்ற எந்தவொரு நடவடிக்கையும் அப்படித் தான் ஆரம்பமாகும்.

சிவகுமாரன் அவர்கள் ஒரு தற்கொலை போராளியல்ல. ஒரு மகத்தான உன்னதமான போராளி. வெறுமனே தமிழ் உணர்ச்சியிலும் தமிழ் தேசிய உணர்வலையிலும் போராட கிளம்பிய ஆரம்பகால போராளிகள் மத்தியில் சமூக உணர்வும் தமிழ் சமூகத்தில் மாற்றம் ஏற்படவேண்டும் என்ற தெளிவிலும் போராட கிளம்பியவர் சிவகுமாரன்.

சிவகுமாரனின் மரணம் ஆயுதப் போராட்ட எண்ணத்திற்கு நெய் வார்த்தது என்பது முழு உண்மை.

அடக்குமுறைக்குள்ளான மக்களின் உரிமைக்குரலாக ஒலித்து, அம்மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அடக்குமுறைக்கெதிராக கிளர்ந்தெழுகின்ற போர்க்குணத்தை மக்கள் மனங்களில் விதைக்கின்ற ஆற்றல் மாணவர் சமூகத்திடம் அதிகமுண்டு. மாணவனாகவிருந்த தியாகி பொன். சிவகுமாரன், தமிழ் மக்களின் உரிமைகள் மீட்கப்படுவதற்கும் சுதந்திர இருப்பை உறுதிசெய்வதற்கும் ஆயுதப் போராட்டமே சரியான மார்க்கம் என்பதை உணர்ந்து சிங்கள இனவாதத்திற்கெதிராக ஆயுதமேந்திய போராட்டத்தைத் தொடக்கி வைத்தவர்.





# ஆர்.சி.பி. அணியை வரவேற்கச் சென்ற 11 பேர் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழப்பு

ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களில் 11 பேர் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்துள்ளனர். 50 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர்.

பெங்களூர் சின்னசுவாமி கிரிக்கெட் மைதானத்திற்கு அருகில் இந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

ஐ.பி.எல். கிரிக்கெட் அணிகளில் நீண்ட நெடுங்காலம் கிண்ணத்தை வெல்லாத அணியாக இருந்தது ரோயல் சேலஞ்சர்ஸ் (ஆர்.சி.பி). இருப்பினும் அந்த அணிக்கு உத்வேகமும், உற்சாகமும் கொடுத்தனர்

இந்நிலையில், ஆர்.சி.பி. வென்றதும் செவ்வாய்க்கிழமை பின்னிரவு பெங்களூர் நகரம் முழுவதும் தீபாவளி திருவிழா போல பட்டாசுகளை வெடித்து கொண்டாடினர்.

இந்நிலையில், வெற்றிக் கிண்ணத்துடன் உடன் ஆர்.சி.பி. அணி நேற்று புதன்கிழமை விதான் சவுதாவில் இருந்து சின்னசாமி கிரிக்கெட் மைதானத்துக்கு திறந்தவெளி பஸ்ஸில் உலா வரும் என தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் போக்குவரத்து நெரிசல் காரணமாக அதற்கு பொலிஸ் மறுப்பு தெரிவித்ததாக தகவல் வெளியானது.

அதே நேரத்தில், கர்நாடக மாநில அரசு மற்றும் கர்நாடக மாநில கிரிக்கெட் சங்கம் சார்பில் ஐ.பி.எல். கிண்ணம் வென்ற ஆர்.சி.பி. அணிக்கு பாராட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டது.

அகமதாபாத்தில் இருந்து விமானம் மூலம் பெங்களூர் சென்ற ஆர்.சி.பி. வீரர்கள், மாலை சுமார் 4 மணி



அளவில் விதான் சவுதா சென்றடைந்தனர். விதான் சவுதாவின் வளாகத்தை ஒட்டி பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் கூடினர். அந்த இடமே மக்கள் வெள்ளத்தால் சூழப்பட்டது. பலர் வளாகத்தின் வேலிகளை தாண்டி வரவும் முயற்சித்தனர். இந்த நிகழ்வின்போது மழை பொழிவு இருந்தது.

தொடர்ந்து அங்கிருந்து சின்னசாமி கிரிக்கெட் மைதானத்துக்கு சென்று அங்கு ரசிகர்களுடன் இணைந்து ஆர்.சி.பி. வீரர்கள் வெற்றிக் கொண்டாட்டத்தில் ஈடுபட இருந்தனர். இந்த நிலையில், ஆர்.சி.பி. அணியின் சாம்பியன்களை பார்க்க ஆர்.சி.பி. அபிமானிகள் சின்னசாமி கிரிக்கெட் மைதானத்தில் குவிந்தனர்.

ஒரே நேரத்தில் அதிக அளவில் ரசிகர்கள் குவிந்த காரணத்தால் கூட்டத்தை பொலிஸாரால் கட்டுப்படுத்த முடியவில்லை என தகவல் கிடைத்துள்ளது. சின்னசாமி கிரிக்கெட் மைதானத்தில் பல்வேறு நுழைவு வாயில்களில் அதிகளவிலான மக்கள் திரண்டு இருந்தனர். தொடர்ந்து மைதான கதவுகள் திறக்கப்பட்ட உடன் ஒரே நேரத்தில் அனைவரும் அதன் உள்ளே நுழைய முயன்றனர். அப்போது ஏற்பட்ட நெரிசலில் சிக்கிய சிலர் மூச்சுத்திணறல், மயக்கம் அடைந்தனர். இதில் பெண்கள், குழந்தைகளும் அடங்குவர். கூட்டத்தை கட்டுப்படுத்த பொலிஸார் லேசான தடியடி நடத்தினர்.

பாதிக்கப்பட்டவர்களை துரிதமாக மீட்டு அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டுசெல்ல பொலிஸார் மற்றும் ரசிகர்கள் உதவினார். பவுரிங் மருத்துவமனை, வைதேகி மருத்துவமனை மற்றும் அடல் பிஹாரி வாஜ்பாய் மருத்துவமனைக்கு அவர்கள் கொண்டு செல்லப்பட்டனர்.

இந்த நிலையில், பெங்களூரில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 11 பேர் உயிரிழந்துள்ளனர். சுமார் 50 இற்கும் மேற்பட்டோர் காயமடந்த நிலையில், 25 இற்கும் மேற்பட்டோர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் மூவர் தீவிர சிகிச்சை பிரிவில் உள்ளனர். இதை மருத்துவமனை ஊழியர்கள் உறுதி செய்துள்ளனர்.

# ‘தக் லைவ்’ திரைப்படத்தை சட்டவிரோதமாக இணையதளங்களில் வெளியிடுவதற்குத் தடை

நடிகர் கமல்ஹாசன் நடிப்பில் உருவாகி இன்று திரைக்கு வரும் ‘தக் லைவ்’ திரைப்படத்தை சட்டவிரோதமாக செயல்படும் 793 இணைதளங்களில் வெளியிட தடை விதித்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இயக்குநர் மணிரத்னம் இயக்கத்தில், நடிகர் கமல்ஹாசன், சிம்பு, அசோக் செல்வன், த்ரிஷா, அபிராமி உட்பட பலர் நடிப்பில் உருவாகியுள்ள படம் ‘தக் லைவ்’. தமிழ், தெலுங்கு, இந்தி, மலையாளம் ஆகிய மொழிகளில் நாளை உலகம் முழுவதும் ‘தக் லைவ்’ திரைப்படம் வெளியாக உள்ளது.

இந்நிலையில் ‘தக் லைப்’ திரைப்படத்தை சட்டவிரோதமாக செயல்படும் 793 இணைதளங்களில் வெளியிட தடை விதிக்க கோரி நடிகர் கமல்ஹாசனின் ராஜ்கமல் பிலிம் இண்டர்நேஷனல் படத்தயாரிப்பு நிறுவனம் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தது.

இந்த மனு நீதிபதி செந்தில் குமார் ராமமூர்த்தி முன் விசாரணைக்கு அப்போது ராஜ்கமல் நிறுவன தரப்பில் வழக்கறிஞர் விஜயன் சுப்பிரமணியன் ஆஜராகி, ‘தக் லைப்’ திரைப்படம் 3500 –க்கும் மேற்பட்ட திரையரங்குகளில் வெளியாக இருப்பதாகவும், இத்திரைப்படத்தை சட்டவிரோ



தமாக இணையதளங்கள், கேபிள் டிவிக்களில் வெளியிட தடை விதிக்க வேண்டும்” எனக் கோரிக்கை விடுத்தார்.

சட்டவிரதோமாக இணைதளங்களில் வெளியானால் படத்தயாரிப்பு நிறுவனத்திற்கு வர்த்தக ரீதியாக மிகப்பெரிய நஷ்டம் ஏற்படும் எனவும் தெரிவித்தார்.

இதையடுத்து உத்தரவிட்ட நீதிபதி, ‘தக் லைவ்’ திரைப்படத்தை பி.எஸ்.என்.எல். உள்ளிட்ட இணையதள சேவை வழங்கும் நிறுவனங்கள், கேபிள் டிவி நிறுவனங்கள் வெளியிட தடை விதித்து உத்தரவிட்டுள்ளார்.



# மத்தியப் பிரதேசத்தில் வான் மீது லொறி கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 9 பேர் பலி, இருவர் காயம்

மத்தியப் பிரதேசத்தின் ஜபுவா மாவட்டத்தில் சீமெந்து ஏற்றிய லொறி, வான் மீது கவிழ்ந்ததில் ஒன்பது பேர் உயிரிழந்துள்ளனர். இரண்டு பேர் காயமடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜபுவா மாவட்டத்தின் மேக்நகர் தாலுகாவுக்கு உட்பட்ட சஞ்சேலி எனும் இடத்தில் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பாவ்புரா என்ற பகுதியில் நடந்த திருமண விழாவில் பங்கேற்ற இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 11 பேர், ஷிவ்கர் மஹுதா என்ற தங்கள் கிராமத்துக்கு வானில் திரும்பிக்கொண்டிருந்துள்ளனர். அவர்களின் வான், அதிகாலை 2.30 மணி அளவில் சஞ்சேலி ரயில் மேம்பாலம் அருகே சென்றபோது, மேம்பாலத்தில் சென்று கொண்டிருந்த சீமெந்து ஏற்றிய லொறி கவிழ்ந்து வான் மீது விழுந்துள்ளது. இதில், வானில் பயணித்த 11 பேரில் 9 பேர் உயிரிழந்துள்ளனர். இருவர் காயமடைந்துள்ளனர்.

இறந்தவர்களில் ஐந்து பேர் சிறுவர்கள் என ஜபுவா பொலிஸ் கண்காணிப்பாளர் பத்மவிலோச்சன் சுக்லா தெரிவித்துள்ளார்.

விபத்தையடுத்து லொறி சாரதி தலைமறைவாகியுள்ள நிலையில், பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தாமிரபரணி ஆற்றில் குளிக்கச்சென்று வெள்ளத்தில் சிக்கிய 20 பேர் மீட்பு



தமிழ்நாடு அம்பாசமுத்திரத்தில் தாமிரபரணி ஆற்றின் நடுப்பகுதியில் குளித்துக் கொண்டிருந்த போது நீர் வரத்து அதிகரித்ததால் சிக்கிக் கொண்ட பெண்கள் உட்பட 20 பேரை தீயணைப்புத் துறையினர் மீட்டுள்ளனர்.

அம்பா சமுத்திரம், காசி நாதர் கோயில் அருகில் தாமிரபரணி ஆற்றில் கல்லிடைக் குறிச்சி, நெசவாளர் குடியிருப்பு, வைராவிகுளம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த பெண்கள், ஆண்கள் மற்றும் சிறுவர்கள் துணி துவைத்து குளித்துக் கொண்டிருந்தனர். ஆற்றின் நடுவே உள்ள பாறை பகுதியில் அவர்கள் குளித்து கொண்டிருந்த போது திடீரென ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால், அவர்கள் கரையேற முடியாமல் திணறினர்.

இது குறித்து, தீயணைப்புப் படையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அம்பா சமுத்திரம் தீயணைப்பு நிலைய அலுவலர் பல்வேசம் தலைமையில் தீயணைப்பு படையினர் அங்கு சென்று, ஆற்றின் நடுவில் சிக்கிக் கொண்ட 10 பெண்கள் உட்பட 20 பேரை கயிறு மூலம் பத்திரமாக மீட்டனர்.




# பாக். நிலஅதிர்வின் போது 216 கைதிகள் தப்பியோட்டம்

பாகிஸ்தானில் உள்ள மாலிர் சிறைச்சாலையிலிருந்து 200 இற்கும் மேற்பட்ட கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர்.

பாகிஸ்தானில் நேற்று முன்தினம் ஏற்பட்ட நிலஅதிர்வின் போது கைதிகளைப் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் சென்ற போதே இவ்வாறு கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர்.

இருப்பினும், தப்பிச் சென்ற 216 கைதிகளில் 78 பேரைப் பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# தென்கொரிய புதிய ஜனாதிபதி லி ஜே மியுங் வடகொரியாவை அமைதி பேச்சுக்கு அழைப்பு



தென்கொரியாவில் ஜனாதிபதியாக செயல்பட்ட யூன் சுக் இயோல் கடந்த ஆண்டு டிசம்பரில் இராணுவ அவசர நிலை அறிவித்தார். இதையடுத்து அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டு இடைக்கால ஜனாதிபதியாக ஹான் டக் சூ நியமிக்கப்பட்டிருந்த நிலையில் தென்கொரியாவில் நேற்று முன்தினம் ஜனாதிபதி தேர்தல் இடம்பெற்றது.

இதில் ஜனநாயக கட்சி வேட்பாளர் லி ஜே மியுங் வெற்றிபெற்றார். இதையடுத்து அவர் ஜனாதிபதியாக பதவியேற்றார்.

இந்நிலையில், ஜனாதிபதியாக பதவியேற்றப்பின் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய லி ஜே மியுங், வடகொரியாவுடன் அமைதி பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

அதேவேளை, வடகொரியா அத்துமீறி செயல்பட்டால் அமெரிக்காவுடனான இராணுவ நட்பு மூலம் பதிலடி கொடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்.



# காசா தற்போது நரகத்தைவிட மோசமானதாக மாறிவிட்டது

## சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் தலைவர் கவலை

காசா தற்போது நரகத்தைவிட மோசமானதாக மாறி விட்டது என சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் தலைவர் மிர்ஜானா தெரிவித்தார்.

ஜெனீவாவில் ஊடகங்களுக்கு கருத்துரைத்த அவர், மனித நேயம் தோல்வியடைந்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

போர் மற்றும் பாலஸ்தீனியர்களின் துன்பத்தை முடிவுக் குக் கொண்டுவரவும், இஸ்ரேலிய பணயக்கைதிகளை விடு விக்கவும், சர்வதேச நாடுகள் போதுமான அளவு செயற்படத் தவறியுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

காசாவில் உள்ள நிவாரண விநியோக தளமொன் றுக்கு அருகில் உதவிபெறச் சென்றவர்கள் மீது இஸ் ரேல் நேற்று முன்தினம் துப்பாக்கிச் சூடு நடத்தியமை தொடர் பில் கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள் ளார்.









# இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரிப்பு

கடந்த மாதம் நாட்டிற்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 130,000 ஐ தாண்டியுள்ளது.

அதன்படி, 132,919 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு மே மாதத்துடன் ஒப்பிடும்போது இம்மாதம் நாட்டிற்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய இந்தியாவிலிருந்தே அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.




# ஜனாதிபதி நிதியத்தின் செயற்பாடுகளை வட மாகாணத்தில் விரிவுபடுத்த நடவடிக்கை

ஜனாதிபதி நிதியத்தின் செயற்பாடுகளை வட மாகாணத்தினுள் விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பிரதேச செயலகங்களுக்கு ஜனாதிபதி நிதியத்தின் செயல்பாடுகள் விரிவாக்கப்பட்டதையடுத்து, மருத்துவ உதவிக்கான விண்ணப்பங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன.

எனவே, இது தொடர்பான கணினி செயன்முறை குறித்து பிரதேச செயலகங்களின் உரிய விடயத்துடன் தொடர்புடைய ஊழியர்களுக்கு தெளிவூட்டுவதும் பயிற்சி அளிப்பதும் அவசியமாகியுள்ளது.

அதன் ஒரு அங்கமாக, வட மாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களின் பிரதேச செயலாளர்கள் மற்றும் ஜனாதிபதி நிதியம் தொடர்பாகச் செயலாற்றும் அதிகாரிகளுக்கு எதிர்வரும் 21 ஆம் திகதியன்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் பயிற்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த திட்டத்தின் மூலம், வடக்கு மாகாணத்தில் ஜனாதிபதி நிதியத்தின் பயனாளிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், பயனாளிகளுக்கு உயர்தர சேவையை வழங்கவும், நவீனமயமாக்கப்பட்ட இணையவழி அமைப்புகளை அறிமுகப்படுத்தவும், மேலும் சேவைகளை விரைவாக வழங்கவும் எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# சுமந்திரன் மீதான காழ்ப்புணர்ச்சிதான் சங்கு - சைக்கிள் கூட்டின் பின்னணி!

## அது மக்கள் ஆணைக்கு இழைக்கும் துரோகம் என்கிறார் மொட்டின் கீதநாத்

வடக்கில் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு மக்கள் வழங்கிய ஆணையை முன்னணி, சுயநல அரசியல் லாபங்களை மட்டுமே மையப்படுத்தி, சுமந்திரன் எதிர்ப்பு அரசியலாக மாற்றுவது தமிழ் மக்கள் வழங்கிய ஆணைக்கான பாரிய துரோகம் என சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் யாழ் மாவட்ட பிரதான அமைப்பாளர் கீதநாத் காசிலிங்கம் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி – ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி இடையிலான புதிய கூட்டு குறித்து வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், தெற்கில் அனைத்து தேசிய கட்சிகளும் இணைந்து இந்த பித்தலாட்ட அரசாங்கத்திற்கு எதிராக அணி திரண்டு நிற்கும் போது, தமிழ் தேசியக் கட்சிகள் மட்டும் ஏன் ஓர் அணியில் சேர்ந்து செயல்பட முடியாது எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ள அவர் –

2025ம் ஆண்டின் உள்ளூராட்சி சபைத் தேர்தல் அதற்கு முன்னரான இரண்டு தேர்தல்களின் மூலம் கற்றுக் கொண்ட பாடங்களின் வெளிப்பாடாக அமைந்தமையுடன், மக்கள் தமது மேலான ஆணையை தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு வழங்கியிருந்தனர்.

மக்கள் வழங்கிய ஆணையின் அடிப்படையில் மக்களுக்கான சேவையைச் செய்வதற்குப் பதிலாக வாக்குகளை பெற்றுக்கொண்ட கட்சிகள் தனிப்பட்ட அரசியல் பகையை மட்டும் பிரதானப்படுத்தி செயற்படுவது தமிழ் மக்கள் வழங்கிய ஆணைக்கான பாரிய துரோகம்.

குறிப்பாக அண்மையில் புதிதாக ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி – ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி இடையிலான புதிய கூட்டு, கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் இதுவரை பேசி வந்த கொள்கைக்கு முற்றிலும் மாறான ஒன்று என்பதுடன், கஜேந்திரகுமார் தரப்புக்கு இருக்கும் சுமந்திரன் மீதான அரசியல் காழ்ப்புணர்ச்சியை தீர்த்துக்கொள்ளும் ஒரு நடவடிக்கையாக மட்டுமே பார்க்க முடிகிறது.

தமிழ் மக்கள் கொடுத்த ஆணையை, இவ்வாறான தனிப்பட்ட எதிர்ப்பு அரசியலாக வெளிப்படுத்துவதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தெற்கில் அனைத்து தேசிய கட்சிகளும் இணைந்து இந்த பித்தலாட்ட அரசாங்கத்திற்கு எதிராக அணி திரண்டு நிற்கும் போது, தமிழ் தேசியக் கட்சிகள் மட்டும் ஏன் ஓர் அணியில் சேர்ந்து செயல்பட முடியாது?

எனவே, தமிழ் மக்களை மையப்படுத்திய அரசியல் சேவையில் ஓர் அணியாக ஈடுபடுவதே மக்கள் தமிழ்த் தேசியக் கட்சிகளிடம் எதிர்பார்க்கும் ஒன்றாக காணப்படுகிறது. – எனத் தெரிவித்துள்ளார்.

# மட்டக்களப்பில் 3 பாடசாலைகளில் உணவு ஒவ்வாமையினால் நாற்பதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் வைத்தியசாலைகளில்!

**(பழுவூரான்)**

மட்டுநகரிலுள்ள மூன்று பாடசாலைகளில் நேற்றுப் புதன்கிழமை பாடசாலை இடைவேளையின் போது பாடசாலைச் சிற்றுண்டி சாலையில் மாணவர்கள் வாங்கி உட்கொண்ட உணவு ஒவ்வாமையினால் 44 மாணவர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

வாந்தி, தலை சுற்று ஏற்பட்டதன் காரணமாக மாணவர்கள் மாவட்ட பிராந்திய சுகாதார சேவை திணைக்களத்தின் துரிதமான நடவடிக்கை மூலம் அம்புலன்ஸில் வைத்தியசாலை அவசர பிரிவிற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கல்லடி விநாயகர் வித்தியாலயத்தின் 30 மாணவர்கள், கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தின் 09 மாணவர்கள் மற்றும் புனித மிக்கேல் கல்லூரயின் 05 மாணவர்களே இவ்வாறு பாதிக்க்ச்ப்பட்டனர்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவை தொற்றா நோய்கள் பிரிவின் வைத்திய அதிகாரி எஸ். உதயகுமார் சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு சென்று துரிதமாக விசாரணைகளை மேற்கொண்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இந்தப் பாடசாலை சிற்றுண்டிசாலைக்கு ஒரே நபர் உணவுகள் விநியோகித்துள்ளமை ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

மாணவர்கள் குறித்த பாடசாலையில் பிட்டு வாங்கி உண்டமையினால் இந்த உணவு ஒவ்வாமை நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர்.

இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தின் ஆரம்பத்தில் - எண்பதுகள் வரை - தாயகத்தில் நின்று நம் இனத்துக்காகப் போராடிய புலமையாளர். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தியாகி சிவகுமாரன், புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உமாமகேஸ்வரன், சுந்தரம் சிறிசபாரத்தினம், சித்தார்த்தன் முதல் டக்ளஸ் தேவானந்தா வரை மூத்த போராளித் தலைவர்கள் எல்லோரோடும் சட்டவாளராகவும், தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்கும் தொடர்பாளராகவும் நெருங்கிப் பழகியவர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழர் தகவல் நிலையம் ஆகியவற்றின் பிதாமகர்களில் ஒருவர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட சன்சோனி கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பு வாதங்களையும் சான்றுகளையும் ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் அனுசரணை சட்டத்தரணியாகச் செயற்பட்டவர். தற்போதைய நிகழ்வுகள் தொடர்பான அவரது பார்வை அவரது அனுபவங்களிலிருந்து தமிழ் மக்களின் புரிதலுக்காக இங்கு தொடராக வெளிவந்தது.

ஆஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழர்களின் சட்டநலன்களில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அவர் முன்னர் 'காலைக்கதிர்' நாளிதழின் வாசகர்களால் நன்கு அறியப்பட்ட அரசியல் கட்டுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

42

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

சமதர்மம், சம உரிமைகள் எனப் பேசும் போது அமைச்சர் சந்திரசேகர் ஒன்றை மறந்து விடுகிறார். அவர் சிங்களத் தரப்பில் உள்ள இனவாதிகளையோ, பேரினவாதிகளையோ எதுவும் குறிப்பீடு தந்து தெரிவிப்பதில்லை. அதற்கான சம உரிமை அவருக்கு இல்லையோ என்னவோ அல்லது அவர் அவர்களையும் தன்னைப் போல தேசியவாதிகளாகப் பார்க்கிறாரோ தெரியவில்லை.

உள்ளூராட்சி சபைகளை அமைக்கும் சடுகுடுவில் அதன் நோக்கங்கள் பற்றி தொடர்ந்தும் காட்டமான கருத்துக்களே அரசியல் தலைமைகள் குறித்து வருகின்றன. அதிலும் இடைபுகும் அமைச்சர் சந்திரசேகர், தமிழ் பகுதிகளில் தாங்கள் யாருக்கு – கிழக்கு இணைப்பை நீதிமன்றத்திற்கு மனு சமர்ப்பித்து பிரித்தவர்கள்.

விடுதலைப் புலிகளுக்கும் சந்திரிகாவுக்கு இடையிலான சுனாமி நிதிக் கட்டமைப்பை நீதிமன்றத்தை நாடி இயங்க விடாமல் தடுத்தவர்கள்.

நோர்வே அரசின் அனுசரணையில் ஏற்படுத்தப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம் இரத்து செய்யப்பட வேண்டும் எனத் தற்போதைய ஜனாதிபதி உட்பட ஜே.வி.பி. தலைவர்கள் யாவரும் ஜே.ஆர். மாதிரி மகா சங்கத்தைத் தேடிக் கண்டி யாத்திரை சென்றவர்கள்.

விடுதலைப் புலிகள் வன்முறைகளை கடைபிடிக்கும் பயங்கரவாதிகளாக, இனவாதிகளாக அழிக்



ஆதரவு தந்தாலும், தமிழரசுக் கட்சிக்கு ஆதரவு தரப் போவதில்லை என்றும், அதே சமயம் நடக்க ஏற்படுத்தப்படும் சந்திப்பில் ஈ.பி.டி.பியை யாருக்கு ஆதரவு கொடுத்தாலும் தமிழரசுக்கு அதனைக் கொடுக்கக் கூடாது என சுரேஷ் பிரேமச்சந்திரனும், சித்தார்த்தனும் டக்ளஸை வற்புறுத்துவார்களாம் எனச் செய்திகள் வெளியாகி உள்ளன. அரசியல் தந்திரங்களில், இவற்றில் ஓர் ஒருமைப்பாடு தேசிய மக்கள் சக்தியுடன் உண்டா என்பது வெளிவரலாம். ஆனால் தேசிய மக்கள் சக்தியின் கருத்தை தமிழ் மக்கள் உற்று நோக்க வேண்டும்.

இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் வடக்கு கப்பட வேண்டும் என்ற அழைப்புக்கான உந்து சக்தியாக இருந்தவர்கள்.

தற்சமயம் ஜே.வி.பி. தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கைகளின் குரலாக, அதன் தலைவர்களாக, தமிழரசு மக்களிடையே பலத்த ஆதரவும் மதிப்பும் கொண்டிருப்பதை பார்க்கிறது. உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் தேசிய மக்கள் சக்திக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சரிந்த வாக்கு வீதத்துக்கு தமிழரசுக் கட்சியே காரணம் என்ற கணிப்பில், தங்களது 'ஒரு நாடு – ஒரு தேசம் – ஓர் அதிகாரம்'

தொடர்ச்சி ▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

என்ற செயற்பாட்டுக்கு அவர்கள் (தமிழரசினர்) குந்தகமாகலாம் என, விடுதலைப் புலிகளுக்கு பயங்கரவாத முத்திரை குத்தியவாறு, இவர்களையும் அடையாளப்படுத்தி ஒதுக்க, இனவாதிகள் என்ற முத்திரையை குத்துகிறார்கள். அப்படிச் செய்து அவர்களை ஓரம் கட்டி ஒதுக்கி விடுவது திட்டம்.

இப்படி அவர்களை ஒதுக்கி விட்டால், பின்னர் மிஞ்சும் தமிழ்த் தேசியத் தரப்புக்கள் 'சைக்கிள்' – 'சங்கு' என்ற கூட்டணிகள் கரைய, தங்களது வீதியில் பயணிக்க வேண்டும் என்ற கருத்து.

ஆக, 1956 இல் இருந்து வைக்கப்பட்ட 'சுயாட்சி', 'பூர்வீக வாழ்விடங்கள்' என்ற கோரிக்கைகள் யாவற்றையுமே அடக்கி விடுவதோ, அன்றில் வெட்டி தங்கள் நிலப்பரப்புகளை, தங்கள் அதிகாரத்தில் ஆளும் தொடர்ச்சியான முனைப்புகளின் நடைமுறையாக்கமே இவை. இதய சுத்தியுடன் – நல்லெண்ணத்துடன் – இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்புபவர்கள், மற்றப் பகுதிகளை உண்மையாகப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களுடன் தான் உறவுகளை மேம்படுத்துவார்கள். அவர்களைக் காய் வெட்டும் நடவடிக்கைகளை முன்னெடுத்து நஞ்சு கலக்க மாட்டார்கள்.

அந்த முஸ்தீபுகளை அமைச்சர் சந்திரசேகர் வெளியிடும்போது, எவற்றை மனத்தில் கொண்டு 13ஆம் திருத்த சட்டத்தை தொட மாட்டோம், அமுல்படுத்துவோம் என்கிறார்? ஜனாதிபதியும்



தேர்தல் காலங்களில் அப்படி பேசினார். ஆனால் இதுவரை அதற்கான முன்னெடுப்புகள் இல்லை.

அடுத்து, முன் கூறியவாறு 'தமிழர் அபிலாசைகளை நாங்கள் நிறைவேற்றுவோம்' என இந்தியப் பிரதமர் மோடியின் மூலமாக சர்வதேசத்திற்கு கூறப்பட்ட, அந்தத் 'தமிழர் அபிலாசைகள்' என்ன என்பவை தெரியவில்லை. அவை வெறுமனே கூறப்படும் வார்த்தைகளாக உள்ளனவே தவிர, தங்கள் அங்கத்தவர்களுக்குத் தன்னும் புரிந்துணர்வுக்காக அது பற்றி கருத்தியல் செய்யப்பட்டதா? அப்படியான தடயங்கள் ஒன்றும் கிடைக்கவில்லை.

இன்னொன்றையும் தமிழ் மக்கள் தீவிரமாகக் கவனிக்க வேண்டும். தங்களது பாதுகாப்புக் காரணங்களுக்காக (அப்போது அமெரிக்காவுடன் இருந்த முறுகல்கள்) இந்தியா தமிழ் மக்களின் பிரச்சினையை வளர்த்து, 1987இல் ஒப்பந்தத்தை உருவாக்கியது. இது இரு நாடுகளுக்கு இடையே உள்ள சர்வதேச ஒப்பந்தம். உள்நாட்டு விவகாரம்




வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் வருகையில் தங்கியிருக்கும் அந்நிய செலாவணி

அல்ல. தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள், இருப்பு, அதிகார பரவலாக்கள் பற்றியவை. அதனைத் தொடர்ச்சியாக இந்தியா பேசி வந்தது. தற்பொழுது இந்தியாவிற்கு போட்டிகளும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களும் சீனாவிடம் இருந்தும் அதன் நட்பு நாடான பாகிஸ்தானிடம் இருந்தும் வருகின்றன. அவற்றுக்குச் சாதகமாக ஜே.வி.பியால் அதிகாரப்படுத்தப்படும் இடதுசாரி அரசு, சீனாவினது நட்புறவு நாடாக இலங்கையில் அரசேறியது. இந்த நிலையில் தங்களது இந்திய எதிர்ப்பு கொள்கைகள் எல்லாவற்றையும் தள்ளி வைத்து, அணிசேராக் கொள்கையைக் கடைப்பிடித்தாலும், இந்தியாவிற்கான பாதுகாப்பு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் பின்னணி பொருளாதார உதவிகள் மட்டுமா? அல்லது தமிழர்களுடனான இனப்பிரச்சினையை உள்நாட்டுப் பிரச்சினையாக அந்த நாட்டு மக்களிடமே இந்தியா விட்டு விட வேண்டும் என இணங்கப்பட்டதா? இந்தியாவின் இன்றைய நிலைப்பாட்டைத் தமிழர்கள் தங்களது சர்வதேச ஆதரவு தளத்திற்காக உணர்ந்து கொள்வது காலத்தின் கட்டாயம்.

ஏனெனில் அதனைப் பேசுவதிலோ, நடைமுறைப்படுத்துவதிலோ இந்தியா மௌனம் காக்குமானால், சிங்களத் தலைவர்கள் காலம் காலமாக இணக்கங்கள் செய்து, உதாசீனம் செய்தவை போல், அவர்களுக்கு பழையவை பற்றிய எந்த கடமைப்பாடும் இல்லாமல், அவை எப்படி உள்நாட்டு விவகாரமோ, இந்திய ஒப்பந்தத்தின் கருத்துக்களையும் ஒரு பக்கச் சார்பாக உள்நாட்டு விவகாரமாக்குவார்கள் – மஹிந்தர் போல. அதனைப் பெற்றுக் கொள்ள இந்தியாவுக்கு எதிராகப் பாராட்டிய எல்லா எதிர்ப்புக்களையும் விட்டு போட்ட கூட கும்பிடுகள் கோடி.

தெற்கில் வீழ்ச்சி பெற்ற கட்சிகளால், தங்களின் மீள்எழுகைக்கும் இருப்புக்கும் இனவாதம் மீண்டும் கைகளுக்கு எடுக்கப்படுகிறது. அத்தோடு இந்தக் கட்சிகள் ஊழலில் திளைத்தமையால் அதன் விளைவுகளில் இருந்து தங்களைப் பாதுகாக்கத்

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

தாங்கள் அதிகாரத்தை கைப்பற்ற வேண்டும் அன்றில் அரசுக்கு தலையிடிகள் தர வேண்டும் என்ற கட்டாயம் அவற்றுக்கு உண்டு. இவற்றைக் கருத்தில் கொண்டு, அல்லது அவர்களுக்கு எதிராக அவர்களை இனவாதிகளாகக் கணித்து எப்படி சட்டத்தை – படையினரை – பாவிப்பது என்ற தயக்கங்களும் இருக்கலாம். ஆனால் இனப் பிரச்சினை நாட்டின் பொருளாதாரத்தின் முள்ளந்தண்டை உடைத்து, வங்குரோத்து நிலையை உருவாக்கியது. அவை தெரிந்தும், சர்வதேசங்கள் வலியுறுத்தியும், மக்கள் அதனை விளங்கிக் கொள்வார்கள் எனப் புரிந்தும், உடனடி நடவடிக்கைகளை அவற்றையொட்டி எடுக்காமல், அவற்றை தனது அரசாங்கத்தின் கடைசி காலங்களுக்கு தள்ளி வைத்து நியமனம் செய்துவிட்டு, வடக்கு – கிழக்கின் 'இனவாதிகளை' துப்புரவு செய்வதில் முனைப்புக் காட்டப்படுகிறது.

அனுபவரீதியாக எந்த ஒரு சர்வ கட்சி மாநாடும் இனப் பிரச்சினைக்கான தீர்வை – தமிழ் மக்களது அபிலாசைகளை – அரசியல்வாதிகள் ஊடாகத் தரப்போவதில்லை. அந்த சர்வ கட்சி கூட்டத்தில் ஜே.வி.பியின் நிலைப்பாடே 'ஒரு நாடு – ஒரு தேசம் – ஓர் அதிகாரம்' என்று இருக்கும். அப்படியே ஆகும்போது மற்றப் பெரும்பான்மை கட்சிகள் தாங்கள் நடத்திய அரசியல்களால் மாற்றான நிலையை எடுக்கக்கூடிய சூழ்நிலைகள் ஏற்படுத்தப்பட மாட்டாது.

ஆதலால், ஜனாதிபதி தமது மனச்சாட்சியின் அடிப்படையில், தமிழ் மக்கள் தம்மீது வைத்த நம்பிக்கைக்கு கைமாறாக, இனப் பிரச்சனையைத் தமிழ் மக்களது அபிலாசைகளின் அடிப்படையில் தீர்க்க விரும்பினால், அவர் உடனடியாக மதமும் இன வேற்றுமைகளும் அரசியல் அதிகாரங்களுக்காக எவ்வளவு தூரம் பாவிக்கப்பட்டன என்பதை உணர்ந்து கொண்டு, அதற்கேதுவான பாதையொன்றை வகுக்க வேண்டும். அந்தப் பாதை தற்சமயம் இருப்பதை போன்ற அதிகாரம் யாவும் ஒரு பைகளில் குவிந்ததாக இருக்கக் கூடாது. இது தொடர்பில் அவர்களது கட்சியின் சிந்தனைகளில் இருந்து விலகி, விஜய்வீர உட்பட கட்சியின் இடதுசாரி தோழர்கள் 1977 இல் எடுத்த கொள்கைப் பிரகாரம், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து, ஆனால் அது தனி நாடு அமைப்பதல்ல என்ற தெளிவுகளில் முன்னேறலாம்.

அப்படியான பாதை ஒன்றை வகுக்கும் ஜனாதிபதி, அரசியல்வாதிகளின் கைகளில் இருந்து இந்தப் பாதை வகுப்பை வெளியே எடுத்து, பல்கலைக்கழக அரசியல் விரிவுரையாளர்கள், புத்திஜீவிகள், கொள்கைத் திட்டங்கள் வகுக்கும் சமூக நிறுவனங்கள் போன்றவற்றிடம் கையளித்து, நடைமுறைப்படுத்தக் கூடிய திட்டங்களை இனப் பிரச்சினையை தீர்க்கக் கூடிய கட்டமைப்புகள் கொண்ட சரத்துக்களுடன் அரசியல் யாப்பு வரைவாக பிரேரிக்க அவர்களைக் கேட்கலாம். அதனை நடைமுறைப்படுத்தும் உளச் சுத்தியுடன், மக்களுக்கு நாட்டின் சகல தலைவர்களும் ஏற்றுக் கொண்டு பயணிக்கும் ஊக்கத்தைத் தர வேண்டும்.

தாங்கள் தற்சமயம் சிக்கி இருக்கும் சகதியிலிருந்து வெளிப்பட, தமிழர்கள் கூட முன்பதிந்தமை போல், தங்களது 'அபிலாசைகளை' அரசியல்வாதிகளிடமிருந்து வெளியே எடுத்து, புத்திஜீவிகளின் கைகளில் பாரப்படுத்த வேண்டும். இவர்கள் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் புத்திஜீவிகளாக அல்லாது அரசியல் பரப்பில் பதவி விருப்பு இல்லாதவர்களாகவும் தேர்ந்தெடுக்கப்படுவது அவசியம். அப்படி இந்தப் புத்திஜீவிகள் உருவாக்கும் திட்டங்களும். வழிமுறைகளும் ஜனாதிபதிய்டனான பேச்சுவார்த்தைகளுக்கு அடித்தளமாக இருக்கலாம்.

இனப் பிரச்சினையை முன்னெடுப்பதற்கு ஜனாதி



பதி 'பொருளாதாரம் மீட்கப்பட வேண்டும், அது மீண்டு விட்டால் எல்லோருக்கும் சுபீட்சம் வரும்' என்ற பரப்புரைகளை மேற்கொள்கிறார். உண்மைதான்.

ஆனால், பதவிக்கு வருமுன், இடதுசரியாகப் பேசிய தத்துவங்களை விட்டு விட்டு, சர்வதேச நாணய நிதியத்தின் கடனை முன்னைய ஜனாதிபதி ரணில் ஒப்பந்தம் செய்தவாறு ஏற்றுக் கொண்டார்.

இடதுசாரிகள் வழமையாகவே உல்லாசப் பயணிகளுக்கும், அவர்களுக்கான குதூகலக் களியாட்டங்களுக்குமான ஏற்பாடுகளுக்கும் ஆதரவு தராதவர்கள். ஜே.ஆர். தனது திறந்த பொருளாதாரக் கொள்கைகளால் நாட்டின் கலாசாரத்தைப் பாழ்படுத்துகிறார் என்று சிங்கள புத்திஜீவிகளின் அமைப்புக்களோடு சேர்ந்து, ஜே.ஆரின் கொள்கைகளால் எழுந்த கலாசாரச் சீரழிவுகளை ஜே.வி.பி. எதிர்த்தது. ஆனால் தற்சமயம் பொருளாதார நெருக்கடிகளால் உல்லாச பயணிகளின் வருகையிலேயே அந்நிய செலாவணியை நாடு நம்பி உள்ளது. அதனை அதிகப்படுத்தும் திட்டங்களை இந்த அரசும் மேற்கொள்கிறது. அது மட்டுமல்லாமல், அவர்களது மகிழ்ச்சிகளுக்காகவும், அவர்கள் பணத்தைச் செலவழிக்கவும் ஏதுவாக, காலி முகத் திடலில் இருந்து, கடற்கரை ஓர சாலையில் (Marine Drive) 24 மணி நேரமும் இயங்குவதான சிற்றுண்டிச் சாலைகள், மதுவகங்கள் அமைப்பதற்கான அனுமதிகள் குறித்துப் பேசப்படு

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி ▲

கின்றது. ஆனாலும் நாட்டின் பொருளாதாரம் அவர்களையும் மீறி கட்டுக்குள் வர மறுக்கிறது.

சர்வதேச சூழ்நிலைகளால் கட்டுநாயக்காவில் இயங்கிய 1,400 பேருக்கு வேலைவாய்ப்புத் தந்து கொண்டிருந்த உடைகள் தயாரிக்கும் தொழிற்சாலை மூடப்படுகிறது. அதேபோல சிறிய தொழில் முயற்சிகள் எத்தனையோ வேலைவாய்ப்புகளைத் தக்கவைத்துக் கொள்ள முடியவில்லை. 250 க்கும் மேலான சிறிய தேயிலைத் தோட்டங்கள் பராமரிப்பு செலவுகளால் கைவிடப்பட்டுள்ளன. தேங்காய் உற்பத்தியின் வீழ்ச்சி என்ற சிரமங்களுக்கு மேல், அமெரிக்க ஜனாதிபதி விதித்த 44 வீத




வரி, அங்கு ஏற்றுமதிகளை மேற்கொள்ளும் உற்பத்தியாளர்களையும் பாதிக்கின்றது. வீழ்ச்சி அடையும் உற்பத்தியாளர்களும் ஏற்றுமதியாளர்களும் நாட்டின் அதிகார நிர்வாக முறைமையையே குற்றம் கூறுகிறார்கள்.

அத்தோடு 06, மே, 2025 இல்இந்தியாவும் இங்கிலாந்தும் கட்டுப்பாடுகள் அற்ற வர்த்தக ஒப்பந்தத்தை மேற்கொண்டு உள்ளன (Free Trade Agreement). இங்கிலாந்து 2020இல் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறிய பின், உருவாக்கிய முக்கிய வர்த்தக ஒப்பந்தமாக இது கருதப்படுகிறது. இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தக ஏற்பாடுகளில் பாரிய மாற்றங்களை இது கொண்டு வருவதால், அது இலங்கையின் பொருளாதாரத்தையும் பல விதங்களில் பாதிக்கும். இந்தியாவுக்கு இங்கிலாந்தின் வர்த்தக சந்தைகளை அணுக சாதகமான சலுகைகள் இருப்பதால், இலங்கை ஏற்றுமதியாளர்கள் அவர்களுடன் போட்டியிட்டு தாக்குப் பிடிப்பது கஷ்டம். இதுவரை 2024 வரை 92,373 கோடி டொலர் வர்த்தகப் பொருள்களை இலங்கை இங்கிலாந்தின் சந்தைக்கு ஏற்றுமதி செய்திருந்தது. அது வீழ்ச்சி அடையும் . அது மாத்திரமல்ல, நாட்டில் செய்யப்படும் நேரடி முதலீடுகளும், இந்தியா தரும் சலுகைகளால் அங்கு ஈர்க்கப்பட்டு, இலங்கையில் தற்சமயம் இயங்கும் தலைமை இடங்கள் இந்தியாவுக்கு மாற்றப்படலாம். இங்கிலாந்து, தற்சமயம் இலங்கையின் முதல் பத்து இடங்களில் நேரடியான முதலீட்டாளர்களின் நிலையில் இருக்கிறது.

இலங்கை இந்த சூழ்நிலைகளைச் சமாளிக்க முடியாமல் இருப்பதற்கான முக்கிய காரணம், பல வருடங்களின் பொருளாதார ஊழல்கள், அதன் தன்மைகள், அரசாங்கங்களின் பொறுப்பின்மை, நீண்ட இனப் பிரச்சனை போன்றவை ஆகும்.

தமிழ் மக்களை ஒதுக்கி, அவர்களை வெளியேற்றியதும், அவர்களுடனான தொடர்ந்த பிணக்கும் சர்வதேசங்களை அரசியல்வாதிகளில் நம்பிக்கை வைக்கத் தூண்டுவதில்லை. இந்தக் காரணங்களால் இனப் பிரச்சினையை வெகு விரைவாக, இணக்கமாகத் தீர்க்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டு. ஆனால் பழைய போக்கில் பல்லவி பாடிக் கொண்டு இருக்கப் போகிறோம் எனில் பொருளாதாரம் பாழ்படுவதைத் தடுப்பது கஷ்டம்.

இங்குதான் புலம்பெயர் மக்கள் தங்கள் ஆதரவை, அவை எந்த விதத்தில் தமிழ்த் தேசிய மக்களின் மனப்போக்கை ஆதரவு தன்மையில் பெற்றுக் கொள்ள பாதைகள் வகுக்கலாம் எனக் கணக்கிட வேண்டும். இங்குள்ள தமிழ் அரசியல்வாதிகளின் தேர்தல்களுக்கு பணம் விரயம் செய்வது போன்ற நடப்புகளை பார்த்தால் ஓட்டைச் சிரட்டையில் கஞ்சி பரிமாறியதாகத்தான் முடிகிறது. இலங்கையின் பொருளாதார நெருக்கடிகளில் புலம்பெயர் சமூகம் எவ்வைகையான நிபந்தனைகளில் – கட்டுப்பாடுகளில் – பொருளாதார அபிவிருத்திகளை முன்னெடுக்கலாம் என்ற திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். இவற்றை ஓரணியாக புலம்பெயர் காரியமாற்றினால் தான் விளைவுகள் இருக்கலாம்.

சில வாசகர்கள் ஏன் வலிந்து வலிந்து, இந்த கருத்துக்களையும் வரலாறுகளையும் தருகிறீர்கள், தமிழ் மக்களின் அரசியல் அவர்களது சுயநலங்களால் மாறப்போவதில்லை, அவர்களின் அபிலாசைகளை சிங்கள அரசியல்வாதிகள் தங்களுடைய சுயநலங்களுக்காக விடப் போவதுமில்லை, ரணிலை ஜனாதிபதியாக்கும் நேரமே எவ்வளவு பணப்பொதிகள் கை மாறின, இவ்வளவு காலமும் தமிழ்த் தேசிய அரசியலால் காத்திரமான புலம்பெயர் சமூகம் ஒன்று உருவானதை தவிர, வேறு என்ன கண்டோம், அவர்களாவது தாங்கள் ஒற்றுமையாக நின்று நாட்டின் மக்களுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்களா, ஆகவே எல்லாவற்றையும் விட்டு, நீங்களும் 'ஒரு நாடு – ஒரு தேசம் – ஓர் அதிகாரம்' என்று அநுராவை ஆதரிப்போம் என்று எழுதி, தமிழ்த் தேசியத்துக்கு கோவிந்தா போடுங்கள். ய்ச்தார்த்தம் அதுதான் என்றார்கள்.

நான் நாட்டில் அங்கிருந்த போது என்னைத் தமிழனாகப் பார்த்தவன். அந்தத் தனித்துவத்தின் அடிப்படையில் நான் சிங்கள மக்களுடன் இணைந்து வாழ வேண்டும் என்ற உறுதிப்பாட்டில் இருந்தவன். நான் முதலில் தமிழனாகவும், அதன் பின் இலங்கையனாகவும் என்னைப் பார்த்தது, சிங்கள சகோதரர்களும் என்னை அப்படிப் பார்க்க வேண்டும், நடத்த வேண்டும் என்று எதிர்பார்த்தவன், விரும்பியவன். அவர்கள் என்னை

தொடர்ச்சி ▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

இன்னொருவனாக மாற்றுவதை ஒத்துக்கொள்ள வில்லை. அதற்காகக் கோஷமும் வேஷமும் போட வும் விரும்பவில்லை. தனித்துவமே மாறிய பின், நான் யார், எனது அடையாளம் என்ன என்று கேள் விகள் உண்டு. அவை என் தன்மானம் பற்றியவை. அகங்காரம் அல்ல. என் தனித்துவத்தை மதிக்கும் நாடு என்னுடையதும்தான் மற்றவர்களதும்தான்.

இந்த ஞானம் எனக்கு 1977 ஆம் ஆண்டு கலவரத்தின் போது சரஸ்வதி முகாமில் நடந்த சம்பவத்தின் எதிரொலியில், 1983 இல் பிறந்த உள்ளுணர்வுகள். அதுவும் அதே முகாமில்தான்.

தமிழ் மக்களது, நாட்டின், புலம்பெயர் அரசி யல்கள் எந்தத் திசைகளில் அவர்களைக் கொண்டு செல்கின்றதோ அதனால் மக்கள் பாக்கியவான் களாவார்கள்.

இவற்றை மாத்திரம் சொல்லி, இந்தத் தொடரை இத்துடன் முடித்து விடுகிறேன்.

இதனைப் பதிவதற்கு பெருமளவில் உதவிய காலை முரசு ஆசிரியர், நிர்வாகம், கருத்துக்களை என்னுடன் பகிர்ந்து கொண்ட பலருக்கும், வாச கர்களுக்கும், நான் இரவில் நீண்ட நேரம் எழுதும் பொழுது எனது மூப்பில் ஏதும் நடந்து விடுவோமோ என என்னை ‘எலியைக் கவனிக்கும் பூனை போல’ என் அருகில் இருந்த மனைவிக்கும் எனது உள்ளார்ந்த நன்றிகள்.

(முற்றும்)

# புதுக்குடியிருப்பு மன்னாகண்டல் பகுதியில் வீதிக்கு வந்த இருபதுக்கும் அதிக யானைகள்



(பா.சதீசன்)

புதுக்குடியிருப்பு மன்னாகண் டல் பகுதியில் இருபதுக்கும் மேற்பட்ட யானைகளின் கூட்டம் வீதிக்கு வந்த மையால் அவ்வீதியில் பயணித்தவர் கள் அசௌகரியங்களை எதிர்நோக்கி னர்.

நேற்றுமாலை 5.45 மணியள வில் வீதிக்கு வந்த யானைகள் சுமார் 15 நிமிடங்கள் அப்பகுதியில் நடமாடி விட்டு பின்னர் காட்டுக்குள் சென்றன.

கூட்டமாக இருபதுக்கும் மேற்பட்ட யானைகள் வீதிக்கு வந்தமையால் அச்சமடைந்த பயணிகள் தமது வாக னங்களை திருப்பி வந்த திசை யில் திரும்பிச் சென்றனர். சிலர் தூர விலகி நின்றனர். யானைக் கூட்டம் தானாக அவ்விடத்தில் இருந்து நகர்ந்து காட்டுக்குள் சென்ற பின்னர் பயணி கள் தமது பயணத்தைத் தொடர்ந்த னர். அண்மைக்காலமாக புதுக்குடி யிருப்பு மன்னாகண்டல் பகுதிகளில் அடிக்கடி யானைக் கூட்டம் வீதிக்கு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# "எதற்குமே தயாராக இருங்கள்!" என்று கட்சியினரைத் தயார் செய்யும் டக்ளஸ்





ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் கொள்கையே சரியானது என்பதையும், எமது அரசியல் தீர்விற்கான அணுகுமுறையே நடைமுறைச் சாத்தியமானது என்பதையும் காலம் வெளிப்படுத்தி வருவதாக தோழர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சார்பாக தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் உறுதியுரை எடுக்கும் நிகழ்வில் நேற்றுக் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போது குறித்த விடயத்தினை தெரிவித்தார்.

"ஈ.பி.டி பி. கட்சியின் கொள்கையும், கட்சியினால் வலியுறுத்தப்படுகின்ற 13 ஆம் திருத்தச் சட்டத்தினை ஆரம்பமாகக் கொண்ட அரசியல் தீர்வு வழிமுறையுமே சாத்தியமானது என்பதை அண்மைய அரசியல் நிலைவரங்கள் வெளிப்படுத்துகின்றன.

13ஆம் திருத்தச் சட்டத்தைத் தொட்டும் பார்க்க மாட்டோம் என்றெல்லாம் முழங்கியவர்கள், எதனை மறுத்தார்களோ அவற்றை ஏற்றுக்கொள்கின்றார்கள் என ஒப்பந்தம் செய்கின்றார்கள்.

எனவே எமது நிலைப்பாடுகளை மக்கள் மத்தியில் நம்பிக்கையுடன் ஆழமாக கட்சியின் செயற்பாட்டாளர்கள் ஒவ்வொருவரும் எடுத்துச் செல்ல வேண்டும்.

அதேபோன்று, எமது கட்சிக்கு எதிராக முன்வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுக்களும் அடிப்படைகள் அற்றவை – அரசியல் உள்நோக்கம் கொண்டவை.

தற்போதுகூட, யாழ்ப்பாணத்தினை சேர்ந்த முன்னாள் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் விரைவாக கைது செய்யப்படுவார்கள் என்றும் செய்திகள் வெளிவருகின்றன.

ஆளுந்தரப்பினர் நினைத்தால் விரும்பியவாறு விசாரணைகளை மேற்கொள்ளலாம். எமக்கு எதிராகவும் அவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படலாம்.

எமக்கு எதிராக அவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமாயின், அவை அரசியல் நோக்கம் கொண்டவையாக இருக்குமே தவிர, உண்மையாக இருக்காது.

எவ்வாறாயினும், அனைத்து சவால்களையும் எதிர்கொள்வதற்கு நாம் தயாரான மனோநிலையுடன், எமது அரசியல் நிலைப்பாடுகளை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்ல வேண்டும்" – என்று தெரிவித்தார்.

# நான்கு வாகனங்களை மோதித் தள்ளிய லொறி












**(உடப்பு க.மகாதேவன்)**

வாரியபொல – அநுராதபுரம் வீதி, வளல்ல பிரதேசத்தில் ஒலி உபகரணங்களை ஏற்றிக் கொண்டு பயணித்த லொறி ஒன்று நேற்றுப் புதன்கிழமை காலை 6.30மணியளவில். விபத்தில் சிக்கியுள்ளது.

லொறியின் சாரதியின் நித்திரைக் கலக்கத்தின் காரணமாக இந்த விபத்து ஏற்பட்டதாக வாரியபொல பொலிஸார் குறிப்பிட்டனர். சாரதி காயம் ஏற்பட்ட நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த வாகனம் நான்கு கார்களை மோதிய பின்பு நிறுத்தப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



# ஆசிரியர் உதவியாளர்களான 23 பேருக்கு நிரந்தர நியமனம்!

(அபு அலா )

கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர் உதவியாளர்களாகப் பணியாற்றிய 23 பேருக்கான நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று (04) திருகோணமலை ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர தலைமையில் இடம்பெற்ற இந்த நியமனம் வழங்கும் நிகழ்வில், கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ரி.ஏ.சி.என்.தலங்கம, ஆளுநரின் செயலாளர் ஜே.எஸ்.அருள்ராஜ், கல்வி அமைச்சின் செயலாளர் கே.குகநாதன், மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஜே.லியாக்கத்தலி, கிழக்கு மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்கள மாகாண ஆணையாளர் திருமதி த.வருணி உள்ளிட்ட பல உயரதிகாரிகள் கலந்து கொண்டு நியமனங்களை வழங்கி வைத்தனர்.

2014 ஆம் ஆண்டு ஆசிரிய உதவியாளர்களாக நியமிக்கப்பட்ட இவர்கள் கடந்த 9 ஆண்டுகளுக்குள் பட்டப்படிப்பை முடித்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

















# திருகோணமலைத் திருக்கடலூர் மீன் பிடிப்படகு மீது வாழைச்சேனை மீனவர் படகில் வந்தவர்கள் தாக்குதல்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை திருக்கடலூர் கடற் கரையில் இருந்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கடற்தொழிலுக்கு சென்ற வெளியிணைப்பு படகு ஒன்றை இலங்கைத்துறை கடற்பரப்பில் வைத்து, வாழைச்சேனையில் இருந்து வந்த மீனவர்கள் தமது பாரிய மீன்பிடிப் படகை கொண்டு மோதி தாக்கியதில் ஒரு மீனவர் கடுமையாக காயமடைந் துள்ளார். அதே படகில் பயணித்த மற்ற இரு மீனவர்களும் பாதிப்பின்றி காப் பாற்றப்பட்டுள்ளனர்.

காயமடைந்த அருந்தவராசா யசோதரன்(35) நேற்று அதிகாலை 3 மணியளவில் திருகோணமலை பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட் டுள்ளார்.

பாதிக்கப்பட்டவர் சம்பவம் குறித்து கூறுகையில் –

தமது படகை அவர்கள் வந்த பாரிய படகை கொண்டு தாக்கிய பின்னர் தன்னை பொல்லுகளால் தாக்கிய மையுடன் வாளினால் வெட்டுவதற் கும் முயன்றனர் எனவும், தன்னை யும் உடன் இருந்த மற்ற இருவரை யும் கொல்லுவதற்கே முயன்றனர் எனவும்,இந்த நேரம் அந்த பகுதிக்கு இன்னுமொரு படகு வந்தமையினால் தங்களைக் கைவிட்டு ஒடி விட்டார்கள் என்றும் கூறினார்.

இத்தாக்குதலில் தமது ரூபா 6 இலட்சம் பெறுமதியான படகு சேத மடைந்துள்ளது எனவும், அத்துடன்



ரூபா 10 இலட்சம் பெறுமதியான வெளியிணைப்பு இயந்திரம் முற்றாக செயலிழந்துள்ளது எனவும், ரூபா 5 இலட்சம் பெறுமதியான மீன்பிடி வலை கள் மற்றும் உபகரணங்கள் கடலில் அமிழ்ந்து விட்டன எனவும் இதனால் தனது வாழ்வாதாரம் முற்றாக பாதிக் கப்பட்டுள்ளது என்றும் மேலும் அவர் கூறினார்.

இச்சம்பவத்தின் போது இன்னு மொரு படகில் பாதிக்கப்பட்ட படகுடன் இணைந்து பயணித்த மற்ற படகில் இருந்த அ.திலீப்குமார் கூறுகையில் –

பாதிக்கப்பட்டவர் எனது அண்ணன். அவரும் மேலும் இருவரும் ஒரு படகி லும்,அடுத்த படகில் நான் உற்பட 3 பேரும் மீன்பிடிக்க சென்றோம். அப் போது நீரோட்டம் காரணமாக கரை யிலிருந்து சுமார் 40 கிலோ மீற்றரில் நாங்கள் இருந்தோம்.நண்பகல் 1.30 மணியளவில் இச்சம்பவம் நடந்தது. அப்போது எங்கள் இரு படகுகளுக் கும் இடையில் சுமார் 2 கிலோ மீற்றர் இடைவெளி காணப்பட்டது. வாழைச் சேனையிலிருந்து ஒரு படகு வருவதை தொலைவில் கண்டோம்.அவர்களே எனது அண்ணனின் படகை மோதி அதனை கவிழ்த்தனர்.இதனை பார்தது அவர்களை காப்பாற்ற நாம் விரைந்த மையால் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் தப்பியோடி விட்டனர்.

இந்த நிலையில் மிகவும் உயிரா பத்தில் இருந்த அண்ணனையும் மற்ற இருவரையும் கடலில் இருந்து மீட் டோம். பின்னர் வாழைச்சேனையை சேர்ந்த இன்னுமொரு படகை உதவிக்கு அழைத்தோம். அவர்கள் வந்து கவிழ்ந் திருந்த படகை நிமிர்த்தி அதனை தமது படகுடன் இணைத்து நேற்று அதி காலை திருக்கடலூருக்கு கொண்டு வந்து சேர்ந்தனர்.

தாக்குதலில் ஈடுபட்டதும்,உதவி செய்யததும் இரண்டு படகுகளும் வாழைச்சேனையை சேர்ந்தவைதான்.

முஸ்லிம் மீனவர்களில் நல்லவர் களும் இருக்கின்றார்கள்,தொழில் போட்டியே இந்த தாக்குதலுக்கு காரண மாக இருக்கும் என்றும் கூறினார்.

சம்பவம் பற்றி நேற்றுக்காலை திருகோணமலை துறைமுக பொலிஸ் நிலையத்திலும்,மீன்பிடித்திணைக்கள மாவட்டக்காரியாலயத்திலும் தான் முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளார் எனவும் அவர் மேலும் கூறினார்.

# இன்றைய ராசி பலன்கள் - 05.06.2025

**மேஷம்**

எந்த ஒரு செயலையும் ஒன்றுக்கு இரண்டு தடவைகள் யோசித்துச் செயல்பட வேண்டும் உங்கள் வார்த்தைகளில் கவனம் தேவை. மனதில் குழப்பம் வேண்டாம். பிரார்த்தனை மூலம் வெற்றி கிடைக்கும்.

இன்று பணியில் வெற்றி காண்பது அரிது. பணியை குறித்த நேரத்தில் முடிக்க திட்டமிடல் அவசியம்.

மனக் குழப்பம் காரணமாக உறவின் நல்லிணக்கம் பாதிக்கும். காரணமேயில்லாமல் உங்கள் துணையுடன் சூடான விவாதங்கள் செய்ய நேரும்.

இன்று பண விரயம் காணப்படும்.செலவுகளை கட்டுப் படுத்த முடியாது. கவனமாக செலவு செய்ய வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. பல் வலி காணப்படும். கண்களுக்கும் சிகிச்சை மேற்கொள்வது சிறந்தது.

**ரிஷபம்**

இன்று சிறப்பாக நாளாக அமையும். கடினமான பணிகளைக் கூட எளிதாக செய்து முடிப்பீர்கள். சகஜமான அணுகு முறை மூலம் எளிதாக இலக்கை அடை யலாம்.

உங்கள் பணியில் சிறந்த வெற்றி பெறுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். எந்த விஷ யத்தையும் புது முறையில் ஆற்றுவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் மகிழ்ச்சியான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் இருவரி டையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

கணிசமான பண வரவின் காரணமாக இன்று மறக்க முடியாத நாளாக இருக்கும். பங்கு வர்த்தகத்தில் சேமிப்ப தன் மூலம் பணம் சம்பாதிக்கலாம்.

**மிதுனம்**

இன்று பொதுவாக மகிழ்ச்சி காணப்படும். நீங்கள் இன்றைய நாளை புதிய தொடர்புகள் ஏற்படுத்திக்கொள்ள பயன்படுத்தலாம். பொது நிகழ்ச்சிகள் மற்றும் விருந்துகளில் கலந்து கொள்வது மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமை மதிக்கப்படும். உங்கள் பணிகளை விரும்பி செய்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச் சியை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் மனம் திறந்து பேசுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமையை சிறந்த முறையில் பரா மரிப்பீர்கள். பங்கு வர்த்தகத்தால் லாபமும் பயனும் அடைவீர்கள்.

ஆரோக்கியத்தைப் பொருத்தவரை இன்று சிறப்பான நாள். இன்று சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.

**கடகம்**

வாக்குவாதங்கள் ஏற்படும் என்பதால் உரையாடுவதற்கு முன் கவனம் தேவை. சகஜமான அணுகுமுறை தேவை.

உங்கள் பணிகளை துல்லியமாகவும் தரத்துடனும் மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினை காணப்படும். நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. தேவையற்ற செலவினங்கள் காணப்படும்.

உங்கள் கண்களில் கவனம் செலுத்துங்கள். சளி, முதுகுவலி போன்ற உபாதைகள் ஏற்பட வாய்ப்புள் ளது. தியானம் மேற்கொள்வது சிறந்தது.

**சிம்மம்**

நீங்கள் அறிவுபூர்வமாக செய லாற்றுவதன் மூலம் இன்று எழும் பிரச்சினைகளைக் கையாள இயலும். இ ன்றைய நாள் சாதகமாக்கிக் கொள்வது உங்கள் கையில் தான் உள்ளது.

சிறப்பாக பணியாற்றுவதற்கு இன்றைய நாள் அனுகூலமாக இருக்காது. பணிகள் அதிகமாக இருக்கும் என்பதால் முறையாக திட்டமிடுவது அவசியம்.

நீங்கள் சிறிய விஷயத்தை கூட பெரிய அளவில் காண்பீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிப் படுத்துவீர்கள். மகிழ்ச்சியான போக்கு சிறந்தது.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். பொறுப்புகள் அதிகமாக காணப்படுவதால் கையில் பணம் குறைவாக காணப்படும்.

**கன்னி**

உங்கள் கடின முயற்சி மூலம் நீங்கள் வெற்றி காண்பீர்கள். நீங்கள் தன்னம் பிக்கையுடன் காணப்படுவீர்கள். முக்கிய முடிவுகள் நன்மை அளிக்கும்.

உங்கள் உறுதி மற்றும் நேர்மை காரணமாக உங்கள் பணிக்கு நல்ல பெயர் கிடைக்க வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள் வீர்கள். இருவரும் பயனுள்ள விஷயங்களை கலந்து ஆலோசிப்பீர்கள்.

கடன்கள் மூலம் சில பண வரவு காணப்படும். இதன் மூலம் உங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வீர் கள்.

இன்று தேக ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். இந்த நேரத்தை நன்கு பயன்படுத்திக்கொள்ளுங்கள்

**துலாம்**

நம்பிக்கையும் மன உறுதியும் இன்று மிகவும் அவசியம். தைரிய மின்மையால் பிரச்சினைகள் உரு வாகும். எதிர்மறை எண்ணங்களை தவிர்க்க வேண்டும்.

பணிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. கவனமுடம் பணியாற்ற வேண்டும்.

உங்கள் மனதில் குழப்பம் காணப்படும். இது கோப மாக வெளிப்படும். இதனை உங்கள் துணையிடம் வார்த் தையில் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சி பாதிப்படையும்.

இன்று தேவையற்ற செலவுகள் ஏற்படும். இதனால் உங்கள் பணச் சுமை அதிகரிக்கும்.

பதற்றம் காரணமாக கால் வலி ஏற்படும். உடற்பயிற்சி மூலம் ஆறுதல் பெறலாம்.

**விருச்சிகம்**

ஆன்மீக ஈடுபாடு ஆறுதல் அளிக் கும். புத்திசாலித்தனமாக யோசிப்பது சிறந்த பலனைத் தரும்.

இன்று பணியில் வளர்ச்சி காண உகந்த நாள் அல்ல. குறித்த நேரத்தில் பணிகளை முடிக்கும் உங்கள் திறமை களைக் குறைக்கும் வகையில் சில தடைகள் ஏற்படும்.

நீங்கள் உங்கள் துணையுடன் மிகுந்த உணர்ச்சி வசப்படுவீர்கள்.சகஜமான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. ஆன்மீக நோக்கத்திற்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

அதிக நீரைப் பருகி உங்களை ஆரோக்கிய மாக வைத்திருங்கள். இதனால் வயிற்று உப்பசம் சீராகும்.

# இன்றைய ராசி பலன்கள் - 05.06.2025




இன்றைய நாள் சுமூகமாகச் செல்லும். நண்பர்கள் மற்றும் நெருங்கியவர்கள் உங்கள் மீது நம்பிக்கையுடன் இருப்பார்கள். இன்று நீங்கள் மகிழ்ச்சியுடன் இருக்கலாம்.

பணியிடத்தில் உங்களுக்கு இனிமையான ஆச்சரியங்கள் காத்திருக்கும். நீங்கள் உற்சாகத்துடன் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மூலம் பிரச்சினைகளை எளிதாக சமாளிக்கலாம். உங்கள் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

உங்களிடம் இருக்கும் பணம் உங்களுக்கு திருப்திகரமாக இருக்கும். கிடைக்கும் பணத்தை சிறந்த முறையில் பயன்படுத்துங்கள்.

உங்களின் மகிழ்ச்சியான மன நிலை காரணமாக தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சற்று மந்தமான நிலை காணப்படும். ஆன்மீக ஈடுபாடு திருப்தியை அளிக்கும்.

இன்று புதிய பணி வாய்ப்புகள் உங்களுக்கு அதிக திருப்தியை அளிக்கும். சாதித்த உணர்வு ஏற்படும்.

உங்கள் துணையுடன் கலந்தாலோசிக்க இது ஏற்ற நாள். இதனால் உறவில் மகிழ்ச்சியும் நல்லிணக்கமும் காணப்படும்.

இன்று அதிக பண வரவு காணப்படும். ஊக்கத் தொகை வகையில் இன்று பண வரவைக் காணலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று முழுவதும் நல்ல ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




எதிர்காலம் பற்றிய எண்ணங்கள் உங்கள் மனதில் ஓடும். இது அனைவரித்திலும் காணப்படும். முக்கியமான செயல்கள் செய்வதற்கு இன்று ஏற்ற நாள்.

பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள். பணிகளை சுமூகமாகக் கையாள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான முறையில் நடந்து கொள்வீர்கள். இதனால் உறவின் பிணைப்பு வலுப்படும்.

இன்று நிதிநிலைமை ஸ்திரமாக இருக்கும். திருப்திகரமான நிலை காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். மகிழ்ச்சி நிலவும்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. சில சூழ்நிலைகள் உங்களுக்கு வருத்தத்தை உருவாக்கும். மகிழ்ச்சியாக இருக்க முயலவும். பிரார்த்தனை மற்றும் வழிபாடு ஆறுதலை அளிக்கும்.

பணியிடத்தில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் பணிகளை கவனமாக ஆற்ற வேண்டும்.

இன்று உங்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்கு ஏற்ற நாள் அல்ல. எனவே எந்த விஷயத்தையும் எளிதாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். உங்கள் தேவைகளை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். உங்கள் தேவைகளுக்கு கடன் கூட வாங்குவீர்கள்.

சளி சம்பந்தமான பிரச்சினைகளால் பாதிப்பு காணப்படும். பிரார்த்தனை மேற்கொள்வது சிறந்தது.







# கிழக்கு மாகாணத்தின் ஆளுநருடன் செஞ்சிலுவைத் தலைவி கலந்தாய்வு

(எஸ்.கீதபொன்கலன்)

கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகரவிற்கும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் தலைவர் திருமதி.செவரின் சப்பாஸ் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று திருகோணமலையில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதில், கிழக்கு மாகாணத்தில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பணிகள் குறித்து விளக்கப்பட்டதுடன், ஆளுநர் அதைப் பாராட்டினார்.

மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்தும், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் எதிர்கால செயற்பாடு குறித்தும் கலந்துரையாடப்பட்டது.